விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 17 ஞாயிற்றுக்கிழமை (02.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972
கிளை கொழும்பில்
உதயமாகியுள்ளது
சாரங்கா ஜுவலரி
இல.55, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
T.P.-0112434971 Fax - 0112434071
(C-2954)



## நாடு கடந்த தமிழீழ அரசு 2010 ஏப்ரலில் தேர்தல்

### இந்திய ஏட்டுக்கு உருத்திரகுமாரன் பேட்டி



(டெல்லி)

நாடு கடந்த தமிழீழ அரசுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் நடைபெறலாம் என்று அதனை உருவாக்குவதற்காக நாடு கடந்த தமிழீழ அரசு அமைக்கும் செயற்திட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் விசுவநாதன் உருத்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளியாகும் தெகல்கா வார ஏட்டுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது நேர்காணலின் விபரம் வருமாறு:

எமது முயற்சி வெற்றிபெறும் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை மிகக் கொடூரமான முறையில் இலங்கை அரசு அடக்கிவிட்டாலும் சுடசுதந்திரம், சமத்துவம் மற்றும் மதிப்பு என் பவற்றுக்கான (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் என்ற சந்தேகத்தில் இரு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தர்மபாலன் கனகசபை, கோணேஸ்வரன் சேதுபதி ஆகிய சந்தேகநபர்கள் தெஹிவளை 2ஆம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் இருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் கொழும்பு நகரில் மேற்கொண்ட தாக்குதல்களின்போது, இவர்கள் வெடி மருந்துகள், டெட்நேட்டர்கள் உள்ளிட்ட உதிரிப்பாகங்களை விநியோகித்து வந்துள்ளதாகவும் இவர்கள் (14ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். - மதவாச்சி பஸ் சேவை இன்று முதல் தினமும் இடம்பெறும்

## வவுனியாவிலிருந்தும் வரமுடியும் யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் மதவாச்சிக்கும் இடையிலான பயணிகள் பஸ் சேவை இன்று முதல் தினமும் இடம் பெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். -கொழும்பு பஸ் கட்டணம் 475 ரூபாயாக நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரையான பஸ் கட்டணம் 475 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

கடந்த 22 ஆம் திகதி ஏ-9 பாதையூடான பஸ் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்ட பின் இடம்பெற்ற இரண்டு பஸ் சேவைகளிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையான கட்டணமாக 325 ரூபாய் அறவிடப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து மதவாச்சி வரை செல்லும் பஸ்கள் மீள யாழ்ப்பாணத்திற்கு திரும்புகையில் பயணிகள் இன்றியே வருகின்றன. (14ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி அரச அதிபர் குற்றப்புலனாய்வினரால் கைது

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரி வினரால் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு நாட்களாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 8.00 மணியளவில் இவரது இல்லத்துக்குச் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் அரச அதிபருடன் சில நிமிட நேரம் பேசியதாகவும் அதனையடுத்து அவரைத் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரச அதிபரை விசாரணைகளுக்காகவே தாம் அழைத்துச் செல்வதாக உறவினர்களிடம் தெரிவித்த அவர்கள் அப்போது தம்மை அடையாளம் காட்டவில்லை.

இதனைத் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட அரச அலுவலகங்களில் 15 ஆயிரம் பதவி வெற்றிடங்கள்

### விரைவில் நிரப்பப்படும்-அமைச்சர் அளுத்கமகே

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அரச நிறுவனங்களில் 15 ஆயிரம் ஆளணி வெற்றிடங்கள் உள்ளதாக மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது ;

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களில் 15 ஆயிரம் ஆளணி வெற்றிடங்கள் உள்ளன.

இவற்றை விரைவில் நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் படித்த பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர்.

இதனை நாம் இப்போது அறிந்துள்ளோம். எனவே இவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பு வழங்குவோம் என்றார். (ந-5)

## யாழ். மாநகர சபைத் தேர்தல் புத்தளத்தில் 6 வாக்குச்சாவடி

(புத்தளம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் மக்களில் 4 ஆயிரத்து 388 பேர் யாழ்.மாநகர சபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாக புத்தளம் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.ஏ.எம்.நபீல் தெரிவித்துள்ளார்.

இவர்கள் வாக்களிப்பதற்காக ஆறு வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரு வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும். மற்றும் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி, பாலாவி சிங்கள மஹா வித்தியாலயம், கற்பிடி அல் அக்ஷா தேசிய கல்லூரி, புளிச்சாக்குளம் உமர்பாஷருக் முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒரு வாக்குச் சாவடியும் அமைக்கப்படும்.

வாக்குகள் யாவும் புத்தளம் மாவட்ட செயலகத்தில் எண்ணப்பட்டு (14ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களின் அடிப்படை வசதிகள் இன்னமும் சீராக்கப்படவில்லை

### முகாமிலுள்ள பெண்மணி பி.பி.சிக்கு பேட்டி

(லண்டன்)

வவுனியா நலன்புரிமுகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டு சில மாதங்களில் கடந்து விட்ட நிலையிலும் முகாம்களின் நிலைமைகள் குறித்தும் அங்கு தங்கியுள்ள மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் பல் வேறு மனித உரிமை அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

நலன்புரி முகாம்களில் சுகாதார வசதிகள், நீர், பெண்களிற்கான பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் போன்ற பல பிரச்சினைகள் காணப் படுவதாக தொடர்ந்தும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் இலங்கை அரசு இக் குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. இந்நிலையில் முகாம்களின் தற்போதைய நிலை தொடர்பாக முகாமில் உள்ள பெண் ஒருவர் பி.பி.சிக்கு கருத்து தெரி வித்துள்ளார். இது தொடர்பாக (14ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற தேர்தல் ஆவணி -08

ஆனந்தசங்கரி 1 X
(தமிழர் விடுதலைக் கூட்டணி)

தமிழர் விடுதலைக் கூட்டணி X

தலைவருக்கு ஓர் விசுவாசம் மிக்க செயல்வீரன் அவர்தான் கந்தையன்.
தலைவரையும் கந்தையனையும் தெரிவு செய்வோம்.

செ.கந்தையன் 8 X X
(முன்னாள் மாநகர முதல்வர்)
-ஆதரவாளர்கள். (3051)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையில் 'சமஷ்டி' போன்றே அதிகாரப் பகிர்வும் காணாமல் போய்விடும்

## இந்தியப் புலனாய்வுத்துறையின் முன்னாள் தலைவர் கேணல் ஹரிகரன்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் எப்போதும் இரட்டைநிலைப்பாடு கொண்டவர்கள். வேண்டும் போதும் எல்லாம் அவர்கள் எதனை வேண்டுமானாலும் பேசுவார்கள்; செய்வார்கள். அவர்கள் முன்னர் இன பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டி பற்றி பேசினார்கள். இப்போது அதனை தூக்கி வீசி விட்டு அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுகிறார்கள். சமஷ்டி போன்றே எதிர்காலத்தில் அதுவும் அரசியல் அரங்கில் இருந்து காணாமல் போய்விடும்.

இலங்கை அரசு தமிழர்கள் விடயத்தில் பாராமுகமாக இருந்தால் கடந்த 30 வருடங்களில் அது சுற்றி வந்த சுழற்சியை மீண்டும் ஒரு முறை சந்திக்க வேண்டி இருக்கும் என்று இந்தியாவின் அரசியல் ஆய்வாளரும் இலங்கை அரசியல் பற்றி தொடர்ந்து எழுதி வருபவருமான கேணல் ஹரிகரன் இவ்வாறு தனது கட்டுரையில் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியப் படையினர் இலங்கையில் இருந்தபோது அதனது புலனாய்வுத்துறையின் தலைவராக செயற்பட்டவர் கேணல் ஹரிகரன். அவரது கட்டுரையின் விபரம் வருமாறு,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசு, நாட்டின் சுதந்திரத்துக்கான போர் என்ற கூச்சலுடனேயே விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டைக்குத் தான் சென்றதாக கூறியது.

மக்கள் அவர்கள் பேசும் மொழியின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டாது வாழும் ஒரு நாடு பற்றிய கனவு குறித்தும் பேசப் பட்டது.

இப்போது பெருந்தொகையான ஆட்களையும் பொருட்களையும் அழியக் கொடுத்து போரை முடித்து விட்ட பிறகு அங்கு மேற் கிளம்பி வரும் சமூக – அரசியல் சூழல் அந்தக் கனவு நனவாகும் என்ற நம்பிக்கையை பிரதிபலிக்கவில்லை. அந்தக் கனவு நனவாகவே போய் விடக் கூடும்.

இப்போது ஒன்று தெளிவாகி விட்டது. இலங்கை அரசியலில் வழக்கற்று போய்க் கொண்டிருக்கின்ற சொற்களின் பட்டியலில் சமஷ்டி போன்றே அதிகாரப் பகிர்வு என்ற சொல்லும் தூக்கி வீசப்பட்டு விடும். அந்தப் பட்டியலில் சிறுபான்மையினர் என்ற சொல்லும் விரைவில் சேர்ந்து கொள்ளக் கூடும்.

இலங்கை முழுவதும் இப்போது ஒரு புதிய ஒழுங்குமுறை மேற் கிளம்பி வருகின்றது. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கூட்டணிக்குள் மட்டுமல்ல, ஏனைய முக்கிய அரசியல் கட்சிகளுக்குள்ளும் இந்தப் புதிய ஒழுங்கை காணமுடிகிறது.

முதன்மை அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள் இதனைத் தெளிவாக படம் பிடித்து காட்டுகின்றன. அக்கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, இனப் பிரச்சினை தீர்வுக்கான அடிப்படை சமஷ்டிதான் என்று 2002 அமைதிப் பேச்சுக்களின் போது ஏற்றுக் கொண்டிருந்தார்.

இப்போதோ தமது அரசியல் தேவைக்கேற்றால் போல் அந்த விடயத்தை பலிபீடத்தில் தூக்கி வீசி விடுவதற்கு ரணில் விக்கிரம சிங்கவோ அவரது கட்சியோ வெட்கப் பட வில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதைவிட மேலானது ஒன்றல்ல.

இலங்கையை அவதானித்து வருபவர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல. அங்குள்ள அரசியல் கட்சிகள் அவர்களின் தலைவர்கள் பலரைப் போலவே இவ்வாறு குத்துக்கரணம் அடிப்பது வழமையானது தான். இது மாதியான நிகழ்வுகள் ஏற்கனவே பலமுறை நிகழ்ந்துள்ளன. அது அவர்களின் அரசியல் பண்பாட்டின் ஒரு பகுதியாகிவிட்டது.

அரசியல் நடவடிக்கைகள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்ததற்கு அரசியல் இரட்டைப் பேச்சுக்களே முதன்மைக் காரணம். இறுதியில் சரியோ தவறோ தமிழ் இளைஞர்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை தூக்கினர். ஏனெனில் தோற்றுப் போன அரசியல் நடவடிக்கைகளையே அவர்கள் தொடர்ந்தும் பார்த்து வந்திருந்தார்கள்.

கிழக்கு மாகாண தேர்தல்கள் முடிந்ததும் அரசியலமைப்பின் 13 வது சட்டத்திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் மீண்டும் வாக்குறுதி வழங்கி யிருந்தார்.

ஆனால், இப்போது அதனை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் அவர் எந்த அவசரத்தையும் காட்டவில்லை போன்றே தோன்றுகின்றது. இதற்கு வலுவான உள்நாட்டு அரசியல் காரணங்கள் ஏதாவது இருக்கலாம்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய்ந்த அனைத்து கட்சியின் முடிபுகள் தொடர்பிலும் ஜனாதிபதி ஆர்வத்துடன் இருக்கிறார். இந்தக் குழு 2006 ஆம் ஆண்டு மகிந்த ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டவுடன் பெரும் ஆரவாரங்களுடன் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் முடிபுகள் எவையும் செயற்படுத்தப்பட வில்லை என்றால் அது செயல் இழந்து போன ஏனைய குழுக்களைப் போன்ற ஒன்றாகவே அமையும்.

குழுவின் அறிக்கை சமர்பிக்கப் பட்டு விட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறையில் இருந்து அடிமட்டங்களுக்கான அதிகாரங்கள் மற்றும் உரிமைகளை வழங்குவது வரையில் பரந்தளவு விடயங்களை அது உள்ளடக்கியுள்ளதாக குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண கூறினார்.

எனினும் இந்த அர்த்தமுள்ள நடவடிக்கையும் இப்போது ஆபத்திலுள்ளது.

அரசியல் அமைப்பை திருத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற் கொண்ட முயற்சியின் வரிசையில் இதனையும் வரலாறு சேர்த்து விடுமோ என்ற அச்சம் நிலவுகின்றது.

இலங்கையின் அதிகாரப் பகிர்வு குறித்து இந்தியா முன்னர் காத்திரமாகக் கருத்து தெரிவித்து வந்தது. பின்னர் 13 வது சட்டத்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதை விரும்புவதாக அது இறங்கி வந்தது.

அதுவாவது நடக்குமா என்ற சந்தேகம் வந்த போது இந்தியா வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருந்துவிட்டது.

எகிப்தில் நடை பெற்ற அணிசேரா நாடுகளின் கூட்டத் தொடரின் போது பிரதமர் மன் மோகன்சிங்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சந்தித்து பேசிக் கொண்டதன் பின்னரே இந்தியா வாயை மூடி மௌனியானது.

ஆனால் இவையெல்லாம் அரசியல் நடவடிக்கைகள். இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய உறுதியளிக்கப்பட்ட பாதையில் நிகழும் நடவடிக்கைகள் அல்ல. இது இலங்கையின் குறைபாடும் அல்ல. அவர்களின் நடைமுறைப்படுத்தலின் உள்ள குறைபாடுகள்.

சிங்களவர்கள் அல்லாத சமூகத்தவரை சிறுபான்மையினர் என்று சொல்வதை அகற்றி விடுவதே தனது விருப்பம் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். அதாவது சிறுபான்மையினர் அற்ற இலங்கையை உருவாக்குவதே அவரின் கனவு.

இது மிகச் சிறந்த உணர்ச்சிகரமான விடயம். ஆனால் அரசியல், பொருளாதார, அரசியலமைப்பு மற்றும் சமூக ரீதியில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாத வரை அந்தக் கனவு நனவாகவோ யதார்த்தமாகவோ முடியாது.

இரு சமூகங்களுமே ஒருவருக்கொருவர் இடைஞ்சல் செய்து கொண்டதன் மூலம் இனப்பிளவு ஆழமாக வேர்ஊன்றி இருக்கின்றது.

அது எப்போது வேண்டுமானாலும் மேற் கிளம்பி வரலாம். தமிழர்கள் சமத்துமாக நடத்தப்பட வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை அரசு தட்டிக் கழித்ததால் இந்த நிலைமை மேலும் மோசமாகும்.

முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டபடி ஆறு மாதங்களுக்குள் தமது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்படாமல் மூன்று இலட்சம் மக்களும் தொடர்ந்து தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்படுவது இதற்கு மேலும் மேலும் உரமூட்டுவதாக அமையும்.

(ந-5)

# ஜனாதிபதி மகிந்த தலைமையிலான அரசு இன்னும் 15 ஆண்டுகள் ஆட்சியில் இருக்கும்

## மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே



ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எதிர் வரும் 15 ஆண்டுகளுக்கு ஆட்சியிலிருக்குமென மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் நேற்று குருநகர் சென். ஜேம்ஸ் பாடசாலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் 15 ஆண்டுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே ஆட்சியிலிருக்கும்.

எனவே இந்த நாட்டின் அபிவிருத்தியில் எமது அரசாங்கத்திற்கு சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

30 வருடங்களாக இந் நாட்டிலிருந்த யுத்தம் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனால் சகல மக்களும் சுதந்திரமாக நடமாடக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கைக்கும் அங்குள்ள மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் வரக்கூடிய வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு வந்து மக்களுடன் பேசும் போதுதான் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதனை அறிய முடிகிறது.

யுத்தம் முடிபடைந்ததையடுத்து யாழ் குடாநாட்டில் மீன்பிடி, விவசாயம் உட்பட அனைத்து துறைகளும் அபிவிருத்தி செய்யப்படும்.

கொழும்பு விலைகளில் யாழ்ப்பாணத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக சதொச திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றார்.

(ந-5)

# கல்வியியற் கல்லூரிக்கு அமைச்சர்கள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜெயந்த நாளை காலை 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் செய்யவுள்ளார். கல்லூரிக்கு கணனிகள் அன்பளிப்பு செய்வதுடன் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலையும் மேற்கொள்ளவுள்ளார்.

அவருடன் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களும் விஜயம் செய்யவுள்ளார் என தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

(ந)

# தமிழ் இளைஞர்கள் மூவர் இராமேஸ்வரத்தில் கைது

இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் இராமேஸ்வரம் சென்ற தமிழ் இளைஞர்கள் மூவரை தமிழக புலனாய்வுத்துறையினர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்து விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

மன்னார் முகாமில் இருந்து கடந்த மாதம் 27 ஆம் திகதி தப்பிச் சென்ற இவர்கள் கடந்த நான்கு நாட்களாக கடலில் சிக்கிய நிலையில் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் கடற்பகுதியைச் சென்றடைந்தனர்.

இதனையடுத்து அவர்களை கைது செய்த தமிழக பொலிஸார் மண்டபம் அகதிகள் பதிவுத் திணைக் களத்தில் ஒப்படைத்ததை யடுத்து அவர்களை கைது செய்துபுலனாய்வுத்துறையினர் அவர்களிடம் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

(ந-14)


**யாழ்.மாநகரசபைத் தேர்தல்-08.08.2009**
**சுயேட்சைக் குழு -1**





6 ☒ ☒ ☒

**க.சிவராஜன்(சைமன்)**

புதிய மாற்றத்திற்கான எமது பயணத்தில் உங்கள் வாக்குகளை கப்பல் சின்னத்திற்கு இட்டு இலக்கம் 6 இற்கு புள்ளடியிட்டு அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுங்கள்.

"ஜெயமோ கர்த்தரால் வரும்"

(3055)

**விற்பனைக்கு**

பொற்பதி வீதி, கந்தர்மடம், மணியகாரன்லேன், ஆனைக்கோட்டை, பிரம்படி லேன், நல்லூர், யாழ்ப்பாணம், பிறவுண் றோட், மாம்பழம் சந்தி, வேம்படி வீதி ஆகிய இடங்களில் வீடுகள் காணிகள் விற்பனைக்குண்டு. நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தரகர் தேவையில்லை.

சேவை முகவர்
தொடர்பு: சுந்தரம்
T.P :-021 222 9177

(3061)

**தோட்டக்காணி விற்பனைக்குண்டு**

அளவெட்டி டச்சு றோட்டில் 8-ப்பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: - 0757259330

(3047)

**காணி விற்பனைக்கு**

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட கண்டி வீதிக்கும் கொழும்புத்துறை பிரதான வீதிக்கும் இடைப்பட்ட ஆனந்தன் வடலி வீதி (செபமாதா கோயிலுக்கு அருகில்) 4 பரப்பு வெற்றுக் காணி உள்ளது.

தொடர்புகளுக்கு
சத்தியதேவி ஸ்ரீஸ்கந்தராசா
077-0657483
69, சிவன் பண்ணைவீதி,
யாழ்ப்பாணம்.

(3054)

# நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா 5 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெற விருந்த நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் மறுநாளான 05 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

வெளியீட்டு விழாவில் பங்கேற்று முதல் நாள் பிரதியைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒப்புதளித்த பெருமக்கள் அனைவரும் 05 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திற்கு தவ றாது சமூகமளித்து முதல் நாள் பிரதி யைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுத் தலைவர் விநயமா கக் கேட்டுக் கொள் கின்றார். (ஓ)

## கண்பரிசோதனை முகாம்

(அல்வாய்)

கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் கண் பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

## வாசிப்பு பட்டறை

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 8 இல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வாசிப்பு பட்டறை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 2.30 மணிவரை யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய தரம் 6 முதல் 9 வரை ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான செயலமர்வு நாளை திங்கட் கிழமை காலை 7.45 மணி முதல் 4.30 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆

வடமராட்சி கல்வி வலய தரம் 12 இல் கற்பிக்கும் புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

நல்லூர் முருகன் உற்சவகாலத்தை முன்னிட்டு தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் இளங்கலைஞர் மன்றத்தினால் நல்லூர் துர்க்காதேவி மணி மண்படத்தில் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை திருமதி செல்வம் நாகராசாவின் பாட்டு இடம் பெறவுள்ளது.

இதில் அணிசெய் கலைஞர்களாக வயலின் செல்வி ஜனனி நல்லைநாதன், மிருதங்கம் வி. ரமணா, கெஞ்சிரா செல் வன் கே. நந்தகு மார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்து சமய காலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்படத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடத்தி வரும் சமய சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை மெய்ஞானம் காட்டும் விஞ்ஞானம் என்னும் விடயம் பற்றி சு. விஸ்வநாதன் சிறப்புச் சொற்பொழிவும் ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறி பாடசாலை மற்றும் நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 |
| தக்காளி | 100 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | -- | 160 | -- |
| கரட் | 70 | 90 | 80 |
| பூசணி | 50 | 60 | 50 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 90 |
| பாகற்காய் | 50 | 60 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 50 | 70 | -- |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 55 | 70 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 250 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 65 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 30 |

# வாரம் ஒரு தகவல்

## உதவும் குரங்குகள்

"அடிக்கடி மனிதன் குரங்கு மாதிரி நடந்து கொள்கிறானே ஏன் அப்படி?"

"இதோ பார்... நான் உன் புருஷன்... என்னை இப்படியெல்லாம் மறைமுகமாக சுட்டிக் காட்டுவது நல்லா இல்லை."

"ஐயோ... நான் உங்களையா சொன்னேன்?"

"குரங்கென்றால் என்ன அவ்வளவு மட்டமாக போச்சா? இன்னும் கொஞ்சநாளில் பார். மனிதனுக்கே உறுப்பு தானம் கொடுக்கப் போகிறது அது"

"அப்படியா சொல்றீங்க?"

"ஆமாம். அதற்கு முன்னோடியாக தென்னாபிரிக்காவில் அதிசயமான ஒரு சத்திரசிகிச்சை நடந்திருக்கிறது"

"எப்படி அது"

"அங்கு ஒரு சிறுமிக்கு காலில் ஒரு விசித்திரமான வியாதி. நான்கு வயதுக்குள் இரண்டு சத்திர சிகிச்சை செய்தும் குணமாகவில்லை. அங்குள்ள ஒரு டாக்டர் மனிதக் குரங்கின் காலில் உள்ள ஒரு எலும்பை எடுத்து இந்தச் சிறுமிக்குப் பொருத்திவிட்டார்."

"ஆச்சரியமாக இருக்கிறதே"

"ஆச்சரியம் தான்... ஏனெனில் உலகத்திலேயே மிருகத்தின் உடம்பிலிருந்து ஒரு உறுப்பை எடுத்து மனித உடம்பில் இணைக்கும் முதலாவது சத்திரசிகிச்சை இதுதான்."

"அப்படியானால் குரங்குதான் நன்றி சொல்ல வேண்டும்"

"இனிமேலாவது புரிந்து கொள். குரங்கையும் என்னையும் சம்பந்தப்படுத்தி கிண்டல் பண்ணுவது தப்பென்று."

"தப்புத்தான். இருந்தாலும் சிலசமயம் நீங்கள் நடந்து கொள்ளும் விதம் என்னை அப்படிப் பேச வைத்து விடுகிறது."

"உன்னைத் திருத்தவே முடியாது. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதற்குப் பதிலாக ஒரு குரங்கையே கல்யாணம் பண்ணியிருந்திருக்கலாம்."

"அது எப்படி... அதை நீங்களே தீர்மானித்துவிட முடியுமா?"

"ஏன்"

"இதற்கு அந்தக் குரங்கு சம்மதிக்க வேண்டாமா?"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

02.08.2009
(ஆடி 17, ஞாயிற்றுக்கிழமை)
துவாதசி பின்னிரவு 12.53 மணிவரை
மூலம் முழுவதும்
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், பயந்த சுபாவம், எடுத்த காரியம் தாமதமாகும், பிதாசிந்தை. |
| இடபம் | எதிர்பாராத மனஸ்தாபம், தொழில் நன்மை, உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், தனலாபம். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய் குணமடைதல், மனமகிழ்ச்சி, தனவருவாய். |
| சிங்கம் | அஜீரணக் கோளாறு, பணக் குறைவு, எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம். |
| கன்னி | மனச்சஞ்சலம், உறவினர் சந்திப்பு, ரோகபயம், புதிய விடயம். |
| துலாம் | அந்நியர் சந்திப்பு, காரிய அனுகூலம், விருந்துபசாரம், தன்னம்பிக்கை. |
| விருச்சிகம் | மனஸ்தாபம், போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம், ரோகபயம். |
| தனுசு | வெகுமானம், மாதர் நட்பு, விருந்து பசாரம், நல்ல முயற்சி. |
| மகரம் | குடும்பக் கவலை, வாக்கு மேன்மை, சயன சுகக்குறைவு, தனவிரயம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, காரிய அனுகூலம், சிந்தனைமிகுதி, தெய்வசிந்தை. |
| மீனம் | நன்கொடை, தொழில் சிந்தை, முயற்சி கைகூடும், நல்ல செய்தி. |

வளவன்

## -: முள்ளி வாய்க்கால் :-

இன்னும்
முன்னூறு வருடம் கழித்து
முதுமக்கள் தாழியாய்
முள்ளி வாய்க்கால்
வெளிவரக் கூடும்
அன்றைய ஐநாசபையோ
ஆராய்ச்சியாளனோ
ஏ.சி.க் குளிரில் இருந்து
முள்ளி வாய்க்கால் பற்றி
யோசிக்கக் கூடும்
இயற்கையில் இங்கே
ஏதோ மாற்றம் நடந்திருக்கிறது
அறிய வேண்டும்
கோடி டொலர்களை கொட்டி
அந்த மண்ணைத் தோண்டி
ஆராய்ச்சி செய்யக்கூடும்
ஆராய்ச்சியாளனே நிறுத்து
பெற்றோல்
இல்லாத தேசம் என்பதால்
அங்கே தான்
உலகம் கண்ணைமூடி
தன் மனச்சாட்சியை
புதைத்துக் கொண்டது
அதை நீ தோண்டாதே
எங்கள் கனவு
எங்கள் நிமிர்வு
எங்கள் முகவரி
அத்தனையும் அங்கேதான்
புதைந்து போயிருக்கிறது
அதை நீ தோண்டாதே.

அவைக்கவி

# தமிழர்க்கு ஓர் தலைவன்



கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம் கடமை இருந்தால் வீரனாகலாம் பொறுமை இருந்தால் மனிதனாகலாம் இந்த மூன்றும் இருந்தால் தலைவனாகலாம். இத்தனை சிறப்புக்களிற்கும் தகுதிவாய்ந்த தலைவனாக தந்தை செல்வா இருந்தார்.தமிழர்கள் துன்ப நிலைகண்டு வேதனையின் வெளிப்பாடாக அன்று சொன்னார்."தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"என்று. அன்று அவர் சொன்னார் அதன் உண்மையை நாங்கள் இன்று காண்கின்றோம். மேய்ப்பன் இல்லா ஆடுகள் போல் தமிழர்கள் இன்று சிந்திச் சிதறி தத்தளித்து தடுமாறுகின்றார்கள்.

நம்மிடையே படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள் புத்திஜீவிகள் வைத்தியர்கள், வழக்கறிஞர்கள் என்னும் நல்மனம் கொண்ட சமூக சேவையாளர்கள் போன்ற தகுதியுடையோர்கள் இருந்தாலும் அவர்களில் பலர் இல்லாதொழிக்கப்பட்டும் அச்சுறுத்தல் காரணமாக அந்நிய நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் தமிழர்க்கு தலைவன் இன்று யார் என ஏங்கித் தவிக்கின்றனர். ஆனாலும் இங்கிருக்கும் சில நல்லறிஞர்களும் புத்திஜீவிகளும் கடந்த காலங்களில் நடந்துபோன கசப்பான சம்பவங்களால் தலைமையேற்க வருவதில் தயக்கம் காட்டுகின்றனர். தம் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது என்ற அச்சத்தில் ஒதுங்கிக் கொள்கின்றனர்.

இவ்வேளையில் பொறுமையும் கருணையும் அறிவும் ஆற்றலும் அனுபவமும் தூங்காமை, துணிவுடமை, சேவை செய்யும் மனப்பான்மை இவையெல்லாம் நீங்காமல் பெற்றவரும் நம்மிடையே இருக்கின்றார். கருணையான உள்ளத் தோடும், கறைபடியா கைகளோடும் அகிம்சை வழியில் அசையாத நம்பிக்கைகொண்ட தந்தை செல்வா வழியை சிந்தையில் கொண்டு சிரமதில் ஏற்று காந்தி வழிநடந்துசாந்தியைக் காண வாரீர் வாரீர் என்று நம்மையெல்லாம் அழைப்பவர், வன்முறைக்கு வாழ்த்துப்பாடாதவர்,உண்மையும்,நேர்மையும் பேணிக் காப்பவர் சிங்கள,முஸ்லிம் மக்களாலும் மட்டுமல்ல உலகநாடுகளில் சகல இராஜதந்திரிகளாலும் மதிக்கப்பட்டும் மரியாதை செய்யப்பட்டும் தமிழ்மக்களின் உள்ளங்களிலே உதயசூரியனாக நீடுதுயில் நீக்கப் பாடிவரும் நிலாவாக காடுமணக்க வந்த கற்பூரப் பெட்டகமாய் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்களே தமிழர் தலைமைக்கு பொருத்தமானவர் என்பதை நாம் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேச சமூகத்தினரின் பாராட்டுதல்களுக்குள்ளாகி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் "யுனெஸ்கோ" வினால் பாராட்டப்பட்டு மகாத்மாகாந்தி நினைவாக உருவாக்கப்பட்ட சமாதானத்திற்கும் அகிம்சைக்குமான "மதன்ஜின் சிங்" விருது கொடுத்து கௌரவிக்கப்பட்டவருமான முதற்தமிழனும் ஒரேயொரு தமிழனுமான திரு வீரசிங்கம் ஆனந்தசங்கரிக்கு தலைமையை தாருங்கள் என்று கேட்கின்றோம்.

"கையில் நெய்யிருக்க வெண்ணெய்க்கு அலைவானேன்"

**பின்வரும் செயற்றிட்டத்தினை செயற்படுத்தக்கூடிய ஆற்றலும் ஆனந்தசங்கரிக்கு மட்டுமே உண்டு.**

## செயற்றிட்டங்கள்

**யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வாழும் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் நான் அறிவேன் அவற்றில்**

1.பல்லின மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
2.இஸ்லாமிய மக்கள் உட்பட அனைத்து இடம்பெயர்ந்த மக்களையும் மீளக்குடியமர்த்துதல்
3.வடிகால் அமைத்தல்.
4.குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்தல்.
5.உள்ளூர் சகல வீதிகளும் ஒழுங்கைகளும் சீர்செய்தல்.
6.நவீன மத்திய பஸ்நிலையம் அமைத்தல்.
7.நகர எல்லைக்குள் சீரான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துதல்.
8.ஆதரவற்றோர் நல ஆணையாளர் பதவியை உருவாக்கி (Charity Commissioner) ஆதரவற்றோருக்கு உதவி அளித்தல்.
9.நவீன நகரமண்டபம், விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம் போன்றவை கட்டியெழுப்பி சகல குளங்களையும் புனரமைத்தல்.
10.நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நுளம்புத் தொல்லையினை அறவே அழித்து சுகாதார சீர்கேட்டை நீக்குதல்.
11.வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் உள்ள உறவுகளையும் சாதகமாக்கி, புதிய செயற்றிட்டங்களை உருவாக்கி "தொழில் வாய்ப்புக்காக" ஏங்கித் தவித்து பணிமனைக்குத் தினமும் நடைபவனி செய்துவரும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.
12.உள்ளூர் தொழிலதிபர்களின் உதவியுடன் ஆடைத்தொழிலகம் ஒன்றை நிறுவி யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்.
13.வன்முறையாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட அபலைகள், அங்கவீனர்கள் ஆகியோரின் நலன் பேணல்.
14.சேரிகளை ஒழித்து வீடமைப்புத் திட்டத்தினை உருவாக்குதல்
15.புராதன சின்னங்கள் மற்றும் மந்திரிமனை, கோட்டை போன்றவற்றை புனரமைத்தல்.
16.மீனவர்களுக்கான குடியிருப்பு அமைத்தல்.

**உங்களுக்கு கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வாக்களிப்பீர் உதயசூரியனுக்கே! அகிம்சையின் அடையாளம் உதயசூரியன்**

**வீ.ஆனந்தசங்கரி - தலைவர், தமிழர் விடுதலைக்கூட்டணி.**

(C-2601)

**தமிழர் விடுதலைக் கூட்டணி** ✕

**வீ.ஆனந்தசங்கரி** ✕ 1

---

**மின்சார கசிவு காரணமாக**

## ஏவி.எம்.ஸ்டூடியோவில் பயங்கர தீ விபத்து

## நடிகர் விஜய் படத்துக்கான அரங்கு எரிந்து நாசம்

(சென்னை)

சென்னை ஏவி.எம். ஸ்டூடியோவில் , மின்சார கசிவு காரணமாக நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.



விஜய் படத்துக்காக போடப்பட்டிருந்த 'வேட்டைக்காரன்' பட அரங்கு எரிந்து நாசமானது. தீயணைப்பு வீரர்கள் 4 மணிநேரம் போராடி தீயை அணைத்தார்கள்.

சென்னை வடபழனியில் உள்ள ஏவி.எம். ஸ்டூடியோவில், ஏவி.எம். பாலசுப்பிரமணியத்துக்கு சொந்தமான இரண்டு அரங்கங்கள் அடுத்தடுத்து உள்ளன.

ஒரு அரங்கில், விஜய்நடித்து வரும் வேட்டைக்காரன் படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. இன்னொரு அரங்கில், விஜய் டி.வி.யின் ''பாட்டுப் பாடவா'' நிகழ்ச்சி படமாக்கப்பட்டு வந்தது.

2 படப்பிடிப்புகளும் மாலை 6 மணிவரை நடைபெற்றன.

அதன்பிறகு படப்பிடிப்புக் குழுவினர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணி அளவில்,விஜய் டி.வி.க்காக போடப்பட்டிருந்த 7ஆவது அரங்கில் இருந்து புகை வருகை காவலாளி பார்த்தார். உடனடியாக மற்ற கவாலாளிகளுக்கு அவர் தகவல் கொடுத்தார்

காவலாளிகள் அனைவரும் திரண்டு வந்து அந்த அரங்கை திறந்து பார்த்தபோது, அரங்கு முழுவதும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

அதிர்ச்சி அடைந்த காவலாளிகள், ஸ்டூடியோ முழுவதும் உள்ள மின்சார இணைப்புக்களை துண்டித்துவிட்டு தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் கொடுத்தார்கள்.

தீயணைப்புத்துறை இயக்குநர் டி.ஜி.பி. நடராஜ் தலைமையில், கோட்ட அதிகாரி பிரியா மற்றும் 100க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் 18 தீயணைப்பு வண்டிகளுடனும், 7 தண்ணீர் லொறிகளுடனும் மின்னல் வேகத்தில் விரைந்து வந்து, தீயணைப்பு பணியில் ஈடுபட்டார்கள். அதிகாலை 6 மணிவரை போராடி தீயை அணித்தார்கள்.

இந்தத் தீ விபத்தில், விஜய் டி.விக்காக போடப்பட்டிருந்த 7 ஆவது அரங்கு முழுவதுமாக எரிந்து சாம்பலாகி விட்டது.

அடுத்து இருந்த வேட்டைக்காரன் பட அரங்குக்கும் தீ பரவி, அதில் பாதி எரிந்து நாசமானாது. (ஓ-4)

---

## மொழிபெயர்ப்புக்கான மென்பொருள் பல்கலைக்கழக விரிவுரையாளர் உருவாக்கம்

புதுச்சேரி பல்கலைக்கழக கணனிதுறை விரிவுரையாளர் தயாரித்த டிரான்ஸ்லிட்ரேஷன் மென்பொருளை சிங்கப்பூரில் உள்ள கணனி மொழியியல் சங்கம் அங்கீகரித்துள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக கணனிதுறை மேல் நிலை விரிவுரையாளர் விஜயானந்த் நிருபர்களிடம் கூறுகையில், புதுச்சேரி பல்கலைக்கழக கணனி துறையில் மேல் நிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் நானும் கம்ப்பியூட்டர் சயன்ஸ் முடித்த மாணவி பூங்குழலி ஆகியோர் இணைந்து மொழிபெயர்ப்பு மென் பொருளுக்கு அவசியமாகத் தேவைப்படும் பெயர்ச்சொற்களை மொழிபெயர்க்கும் மென்பொருளைத் தயாரித்துள்ளோம்.

அதை சிங்கப்பூரில் உள்ள கணனி மொழியியல் சங்கத்திற்கு அனுப்பினோம். அந்த சங்கம் எங்களது மென்பொருளை அங்கீகரித்து இன்று சிங்கப்பூரில் நடக்க உள்ள கருத்தரங்கிற்கு அழைத்துள்ளது. ஆங்கிலத்தில் உள்ள சொற்களை தமிழில் அதற்குரிய பொருள் தரும் சொற்களைக் கொண்டு மொழிபெயர்ப் பது உண்டு. ஆனால் ஒருவருடைய பெயர் ஊர் மற்றும் இடங்களின் பெயர்களை மொழி பெயர்க்க முடியாது. ஆங்கில மொழியில் ஆகாஷ் என்பதை தமிழில் ஆகாஷ் என்று அப்படியே எடுத்து தமிழில் எழுதுவதற்கு டிரான்ஸ் லிட்ரேஷன் என்று பெயர். இந்த டிரான்ஷ் லிட்ரேஷன் மென்பொருளை நாங்கள் தயாரித்துள்ளோம். இதில் ஆகாஷ் என ஆங்கிலத்தில் டைப் செய்தால் அதில் ஆகஷ் உள்ளிட்ட பல்வேறு பெயர்கள் விடையாகத் தெரியும். அதில் சரியா்ன விடைகளைத் தெரிவு செய்து கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். (ஓ-4)

---

## திருட்டுக் கும்பலிடம் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐம்பொன் சிலைகள் மீட்பு

சென்னையில் சிலை திருட்டு கும்பலிடம் இருந்து 40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஐம்பொன் சிலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சென்னையில் பொருளாதார குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் டி.ஜி.பி. திலகவதி ஐ.ஜி. ராஜேந்திரன் நிருபர்களிடம் கூறுகையில்,

தமிழக அளவில் கோவில்களில் சிலை திருட்டை தடுக்க, கண்காணிப்பு குழுக்களை அறநிலையத்துறை அதிகாரிகளுடன் இணைந்து ஏற்படுத்தி வருகிறோம். சென்னை கோயம்பேடு பஸ் நிறுத்தத்திற்கு வந்த சிலை திருட்டு கும்பலை, சிலை கண்காணிப்பு குழுவினரின் உதவியுடன் கைது செய்தோம்.

அவர்கள் வைத்திருந்த சாக்குப்பையில் இருந்த இரண்டு ஐம்பொன் சிலைகளை பறிமுதல் செய்தோம். சிலை கடத்திய சோனமுத்து, சொக்கலிங்கம் ஆகியோரை கைது செய்துள்ளோம். அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட 40 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஐம்பொன் சிலை கள், புதுக்கோட்டை பகுதியில் உள்ள கோவிலில் திருடப்பட்டவையாக இருக்கலாம். தமிழக அளவில் சிலை பாதுகாப்பு மையங் கள் எழு இடங்களில் செயல்பட்டு வருகின்றன.



இந்த மையங்களை மாவட்டந் தோறும் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கோவில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் வாலி பர்களை, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக தேர்வு செய்து வருகிறோம். அவர்கள் சிலைகளை திருட வரும் கும்பலை எதிர்த்து தாக்கும் திறமை படைத்தவர்களாக இருக்க வேண்டும். காவலர்களுக்கு கொடுக்கும் பயிற்சிகளும் அவர்களுக்கு கொடுக்கும் திட்டம் பரிசீல னையில் உள்ளது. இதுவரை 16 சுவாமி சிலை கள் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன. அதன் மதிப்பு 75 கோடி ரூபாய் என்று அவர் கூறினார். (ஓ-4)

# அரசியல் தலைமைத்துவங்கள் முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கைக்கு பூரண ஆதரவு

## கொழும்பு மாவட்ட பேராயர் அதி.வண.மெல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

சமாதானம் சகோதரத்துவம் மற்றும் சௌபாக்கியம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு ஜனாதிபதி மற்றும் ஏனைய அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் சகல செயற்றிட்டங்களுக்கும் தாம் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவ தாக புதிதாக ஒரு நிலைப்படுத்தப்பட்ட கொழும்பு மறை மாவட்ட பேராயர் அதி.வண. மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பு மறை மாவட்டத்தின் 9 ஆவது பேராயராக வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரினால் திரு நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பேராயர் நாடு திரும்பினார். இவருக்கு கத்தோலிக்க ஆயர்கள் மற்றும் குருமாரினால் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையர் யாவரும் ஒரு தாயின் மக்களாக ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே. எந்த சமயத்தவராக இருந்தாலும் எந்த வகையான சமூகத்தைச் சேர்ந்தவராயினும், அதே போல் எந்த வர்க்கத்தினராக இருந்தாலும் சரி சகலரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற நிலைக்கும் அனைவரும் இலங்கையர் என்ற ஒருமைப்பாட்டுக்குள்ளும் இணைய வேண்டியது அத்தியாவசியமாகும். இந்த ஒற்றுமை, ஒருமைப்பாடு தொடர்பாக ஒரு கத்தோலிக்கன் என்ற வகையில் எனக்கொரு பொறுப்பு இருப்பின் அதனை நிறைவேற்றுவது எனது கடமையாகும்.

இலங்கை அரசாங்கம் ஜனாதிபதி மற்றும் ஏனைய அரச தலைவர்கள் ஆகியோரால் முன்னெடுக்கப்படுகின்ற சமாதானம், சகோதரத்துவம் மற்றும் சௌபாக்கியம் ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முடிந்தளவிலான பரிபூரண ஒத்துழைப்பையும் வழங்குவேன் என்றார். (ஓ-4)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எஸ் எழுத்துக்கள்

## ஜனாதிபதி அச்சத்தில் என்கிறார் மனமேந்திரா

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து வெற்றி பெறக் கூடிய வலு ரணில் விக்ரமசிங்கவிடம் இல்லை என்பதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை வேட்பாளராக நிறுத்துவதை தனிப்பட்ட ரீதியில் தான் விரும்பவில்லை என எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ள புதிய ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாடு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடிய 4 பேர் கொண்ட பட்டியல் இருப்பதாகவும் இவர்களின் பெயர் எஸ் என்ற ஆங்கில எழுத்தில் ஆரம்பிப்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த எஸ் எழுத்து தொடர்பில் அச்சம் கொண்டுள்ளார் எனவும் மனமேந்திரா கூறியுள்ளார்.

எனினும் எஸ் எழுத்து கொண்ட நபர்கள் யார் என்பதை அவர் வெளியிடவில்லை. இவர்கள் ஜெனரல் சரத் பொன்சேகா, முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா சரத் மனமேந்திரா, சுமங்கள தேரர் ஆகியோர் புதிய ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# சிறுவயது முதல் பிள்ளைகளுக்கு சமயக் கல்வியை புகட்ட வேண்டும்

சமயக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி அதனைப் பாடத்திட்டத்திலும் கட்டாய பாடமாக்கியுள்ள நாடுகளில் இலங்கை முதலிடம் வகிக்கின்றது. இந்த ரீதியிலே தமது பிள்ளைகளுக்கு கட்டாயம் சிறுவயது முதல் சமயக் கல்வியை புகட்ட வேண்டும் என அஹதிய்யா மத்திய சம்மேளனத் தேசிய அமைப்பாளர் தேசகீர்த்தி ஏ.எல்.எம் அஸ்வர் ஹாஜி தெரித்தார்.

சென்மேரிஸ் மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இஸ்லாமிய தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அஸ்வர் ஹாஜி மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் பெற்றோர்கள் இன்றைய கால கட்டத்தில் தமது பிள்ளைகளின் மார்க்க கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அஹறய்தியாவுக்கு வழங்காமலிருப்பது கவலை தரக் கூடியதாகவுள்ளது.

பல்கலைக்கழக நுழைவுக்கும் அரசு தொழில் வாய்ப்புக்களின் போதும் அஹதிய்யா சான்றிதழ்களுக்கு முதக்கியத்துவம் அளிக்கப்படுவதால் பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு அஹதிய்யா அளிக்கும் பங்களிப்பு மகத்தானது என்றார். (ஓ-4)

# மாணவனை அடித்துக் காயப்படுத்திய ஆசிரியைக்கு பிணையில் செல்ல அனுமதி

பிரம்பினால் அடித்து மாணவனொருவனை காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கலன்பிந்துனுவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பாடசாலை ஆசிரியையை அனுராதபுரம் மேலதிக நீதிபதி சிவந்த மஞ்சநாயக்க 1இலட்சம் ரூபா பெறுமதியான இருவரின் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

கலன்பிந்துனுவெவவில் உள்ள பாடசாலை ஒன்றில் சேவையாற்றி வரும் ஆசிரியை ஒருவரே மேற்படி குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டவராவார்.

மேற்படி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 12 வயதுடைய மாணவனை குறித்த ஆசிரியை பிரம்பினால் அடித்து காயப்படுத்தியுள்ளார். இதையடுத்து காயமடைந்த மாணவன் கலன் பிந்துனுவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக கலன் பிந்துனுவெவ பொலிஸாரினால் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன் பிந்துனுவெவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சானக த சில்வா தலைமையிலான பொலிஸ் குழு மேற்கொண்டு வருகிறது. (ஓ-4)


உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?

கொமர்ஷல் வங்கி




அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-

இரண்டாம் இடம் ரூபா 7,500/-

மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு, உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/- க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள். அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

அருணலு

சிறுவர் சேமிப்புக் கணக்கு

# அகவை எழுபதில் இலங்கை வங்கியும் அதன் வளர்ச்சிப் பாதையும்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் அதன் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நிதியியல் சம்பந்தமான கொள்கையும் வங்கி நடவடிக்கைகளும் என்றால் யாரும் மறுத்து உரைப்பதற்கில்லை. அந்த வகையில் நமது நாட்டின் வங்கியியல் வரலாறு பல்வேறுபட்ட அரசியல் மாற்றங்களாலும் உள்நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்த சூழ்நிலையாலும் அவ்வப்போது பல படிமான வளர்ச்சிக்கு முகம் கொடுத்து வந்திருக்கிறது.

அதிலும் குறிப்பாக அரச வங்கிகளில் ஒன்றான எமது "இலங்கை வங்கி" அகவை எழுபதில் தனது வங்கியியல் வரலாற்றில் வைர வரிகளை தடம் பதித்து இன்று தன்னிகரற்ற மக்கள் சேவையால் "தேசத்தின் வங்கியாளர்" என்ற மகுட வாசகத்தின் கீழ் நடந்து வந்த பாதையில் கடந்து வந்த நிகழ்வுகளை மீட்டுப் பார்ப்பதிலும் அவற்றை வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் நாம் புளகாங்கிதம் அடைகின்றோம்.

### இலங்கை வங்கியின் தோற்றம்

1932 ஆம் ஆண்டு இலங்கை வணிக வங்கியியல் மற்றும் காப்புறுதி சம்பந்தமான ஒரு ஆணைக்குழுவினை நியமிக்குமாறு திரு. ஜோர்ஜ். ஈ.டி.சில்வாவினால் நாடாளுமன்றத்தில் பிரேரணை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு உருவான ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய 1939 ஆவணி மாதம் முதலாம் திகதி அன்றைய தேசாதிபதி சேர் அன்று கல்டிகொற் அவர்களால் இலங்கை வங்கியின் முதற் கிளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக் கிளை இலக்கம் 41, பிறிஸ்டல் வீதியில், கோட்டையில் "City Office" என்னும் நாமத்துடன் விளங்குகின்றது.

### வளர்ச்சிப் பாதையில் இலங்கை வங்கி

இன்று இலங்கையில் மட்டுமல்லாது இலங்கை வங்கியின் கிளைகள் லண்டன், மாலைதீவு, இந்தியா ஆகிய வெளி நாடுகளில் மூன்று சர்வதேச கிளைகளையும் கொண்ட இலங்கை வங்கியானது உள்நாட்டில் 305 கிளைகளைக் கொண்டும் 110 நீடித்த விசேட கரும பீடங்களையும் கொண்டு தலைநகரில் உயர்ந்த 30 மாடிகளைக் கொண்ட கட்டடித்தில் தனது தலைமைக் காரியாலயத்தைக் கொண்டும் இயங்குகின்றது.

வன்னியில் இயங்கி வந்த மூன்று கிளைகள் தவிர்ந்த அனைத்துக் கிளைகளும் கணனி வலைப்பின்னலுக்குள் இணைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டு சகல கிளைகளும் ஒரே வங்கி நடைமுறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டில் கணனி மயப்படுத்தப்பட்ட அதி கூடிய கிளைகளைக் கொண்ட வங்கி இலங்கை வங்கியே என்ற பெருமையையும் கொண்டுள்ளது.

வேறு பொருளில் கூறுவதாயின் அதி கூடிய சொத்துக்களைக் கொண்டதும் அதிக எண்ணிக்கையான ஊழியர்களைக் கொண்டதும் அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்களைக் கொண்டதும் இலங்கை வங்கி தான் என்பது மறுத்துரைக்க முடியாத உண்




மையாகும்.

### யாழ் குடா நாட்டு மக்களும் இலங்கை வங்கியும்

யாழ். குடா நாட்டில் முதலாவதும் இலங்கை வங்கிக் கிளைகளுள் ஐந்தாவதுமாகிய யாழ். அதி மேற்தரக் கிளையானது 02.02.1945 ஆரம்பிக்கப்பட்டது. இக் கிளையானது கொழும்பு மாநகரக் கிளை (City Office) கண்டிக் கிளை, பெற்றா (Pettah Branch) மற்றும் காலிக் கிளைகளையடுத்து ஆரம்பிக்கப்பட்டது. இக் கிளை ஆரம்பத்தில் யாழ். மின்சார நிலைய கட்டிடத்திற்கு முன்பாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஒரு சிறிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப் பட்டது.

இதன் ஆரம்ப முகாமையாளராக பணியாற்றிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சி. லோகநாதன் என்பவரே பின் நாளில் இலங்கை வங்கியின் முதல் இலங்கையரான பொது முகாமையாளர் பதவி வகித்த பெருமையையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இது இலங்கை வங்கி வரலாற்றில் யாழ். மக்களுக்கு கிடைத்த பெருமையும் கூட. அதனையடுத்து பருத்தித்துறையில் குடாநாட்டின் இரண்டாவது கிளையும் இலங்கை வங்கியின் 28 ஆவது கிளையுமாக 18.02.1959 ஆம் ஆண்டு இவரால் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் யாழ். குடாநாட்டில் யுத்த சூழ்நிலையால் காகிதாதிகள், இயந்திர உபகரணங்கள் போன்ற வசதிகள் அற்ற நிலையில் வங்கியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையால் ஊரடங்கு, ஹர்த்தால்கள், மின்சாரமின்மை, பொருளாதாரத்தடை போன்ற பின்னடைவுகள் இருந்த போதிலும் ஆற்றிய பணியினை மக்கள் மறப்பதற்கில்லை. வங்கிகளில் திரவப் பணம் அற்ற நிலையிலும் யாழ். வங்கி அதிகாரிகளின் புத்தி சாதுரியமான நடவடிக்கைகளால் கொடுப்பனவுக் கட்டளை வங்கியியல் (Pay Order Banking) நடாத்தப்பட்டு வங்கிப் பணிகள் நடாத்தப் பட்டன.

போக்குவரத்து சீரற்ற நிலையிலும் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்து பதவி வேறுபாடின்றி வங்கியாளர்கள் தமது பணியினை ஆற்றியமை என்றும் ஒரு வரலாற்று நிகழ்வே. இவ்வாறாக யுத்த சூழ்நிலையிலும் எமது கிளைகள் திறக்கப்பட்டு படிப்படியாக குடாநாட்டில் இன்று மொத்தம் 12 கிளைகளையும், 6 விரிவாக்கற் கிளைகளையும் கொண்டு இலங்கை வங்கி இயங்குகின்றது. மேலும் விரிவாக்கற்கிளைகள் கொக்குவில், நெடுந்தீவு போன்ற இடங்களிலும் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

### சமூகப் பணியில் இலங்கை வங்கி உறவுகள்

தானங்களில் சிறந்த தானம் இரத்த தானம். அந்த வகையில் ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வங்கியின் உத்தியோகத்தர் ஊழியர்களில் கணிசமானோர் பால் வேறுபாடின்றி இரத்த தானம் செய்வது வழக்கம். அன்றைய தினம் ஏனைய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் யாழ். போதனா வைத்தியசாலையின் உட்புற சுற்றாடல்களை சுத்தம் செய்வதும், வருடம் தோறும் வைத்தியசாலைக்கு தேவையான உபகரணங்களில் கணிசமான தொகை பணத்தினை செலவிடுவதும் வழமையாகி விட்ட நிகழ்வு.

அந்த வகையில் அண்மையில் கூட எமது வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்ரமசிங்க யாழ். நகர் வருகை தந்த போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று அன்பளிப்பினை வழங்கியிருந்தார்.

அது மட்டுமல்ல இலங்கை வங்கி ஊழியர்கள் கிராமங்கள் தோறும் சென்று புதிய கிராம எழுச்சித் திட்டங்களை அறிமுகம் செய்து அத்தகைய கிராமத்தவர்களுடன் விளையாட்டுப் போட்டி கலை நிகழ்வுகளை நடாத்தி இலைமறை காயாயிருந்த அவர்களின் திறமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து அங்கே சிறு கைத்தொழிற் கடன் திட்டங்களை உருவாக்கி அக் கிராமத்தினை மேன்மை


**திரு.ச. நடராஜா**
**இலங்கை வங்கி,**
**யாழ். கச்சேரிக் கிளை.**

அடையச் செய்திருக்கின்ற இலங்கை வங்கிக் கிளைகள் தற்போது தம்மிடையே ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்ற நிலையில் இருப்பதை இன்று நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

(தொடரும்)

## கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்ற பக்தைக்கு நடுக்காட்டில் முருகப் பெருமான் காட்சி





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்ற கிழக்கு மாகா ணத்தைச் சேர்ந்த பக்தை ஒருவருக்கு வாகூர வெட்டை என்னும் இடத்தில் நடுக் கானகத்தில் வைத்து கதிர்காம முருகன் காட்சி கொடுத்ததுடன் அவரிடம் ஒரு பண முடிப்பையும் வழங்கிவிட்டு மறைந்துள்ளார்.

கிழக்கு மாகாணம், காரைதீவைச் சேர்ந்த பக்தை திருமதி மானாகன் புவனேஸ்வரி (வயது 55) என்பவருக்கே வாகூரவெட்டை நடுக் கானகத்தில் வைத்து முருகப் பெருமான் காட்சியளித்துள்ளார்.

இந்த பெண் பக்தையையும் இவருக்கு கதிர்காம முருகன் வழங்கிய பண முடிப்பையும், பண முடிப்பிற்குளிருந்த ரூபா பணத்தையும் படங்களில் காணலாம். (ஓ-4)



## மெனிக்பாம் முகாம் மக்களை முதலில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை

### அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா மெனிக்பாம் கிராமங்களில் வசிக்கும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மாதம் 5 ஆம் திகதி தமது சொந்த கிராமங்களில் மீள்குடியமர்த்தப் படவுள்ளதாக மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந்த மீள் குடியேற்றம் இடம் பெறவுள்ளதாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் 180 நாட்கள் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த மக்கள் மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஆயிரத்து 445 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 45 குடும்பங்களுமே இவ்வாறு 5 ஆம் திகதி புதன்கிழமை 60 பஸ் வண்டிகளில் வவுனியாவிலிருந்து சொந்த கிராமங்களுக்க அனுப்பப்படவுள்ளதாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் மேலும் கூறினார். (ஓ-6)

## யாழ்ப்பாணம் சுற்றுலாபுரியாக மாற்றப்பட உள்ளது

யாழ்ப்பாணம் சுற்றுலாப்புரியாக மாற்றப்பட உள்ளதாக சுற்றுலா மேம்பாட்டு அமைச்சர் பைசல் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவ கரையோரப் பகுதி சுற்றுலாத்தள அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் யுத்த களமாக அன்றி யாழ்ப்பாணத்தின் பல்வகை சிறப்பம்சங்கள் குறித்துப் பிரசாரம் செய்வதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியும் என்று தெரிவித்தார். (ஓ-5)

திரை விமர்சனம்




# மோதி விளையாடு

நட்சத்திரங்கள்:- வினய், காஜல் அகர்வால், கலாபவன்மணி, யுவா, சந்தானம், மயில்சாமி மற்றும் பலர்

இயக்கம் :- சரண்

கோடீஸ்வரர் கலாபவன் மணியின் ஒரேமகன் வினய். வளர்ப்பு மகன் யுவா இருவரும் பணச்செழிப்பில் செக்யூரிட்டிகள் பாதுகாப்புடன் பார்ட்டி,கொண்டாட்டம் எனத் திரிகின்றனர்.

கல்லூரி மாணவி காஜல் அகர்வாலால் வினயின் சொகுசு கார் விபத்துக்குள்ளாகிறது. காருக்கு ஏற்பட்ட ரூ.3 இலட்சம் இழப்பை ஈடுசெய்ய காஜலை சில நாட்கள் தன் வீட்டில் வேலை செய்ய வைக்கிறார்.



அப்போது இருவரும் காதல் வயப்படுகின்றனர். யுவாவும் காஜலை விரும்புகிறார்.

கலாபவன் மணியின் எதிரிகள் வினய்யை தீர்த்துக்கட்ட ரௌடிகளை ஏவுகின்றனர். அவர்கள் சுடும் போது குண்டு தவறி யுவா மேல் பாய்ந்து யுவா பலியாகிறார்.

வினய்யை கொல்ல ரௌடிகள் துரத்துகின்றனர். அப்போது வினய்யின் வசதி வாய்ப்புகள் திடீரென்று பிடுங்கப்படுகிறது.

அதிர்ச்சியாகும் வினய் தந்தையிடம் காரணம் கேட்க அவர் யுவா தான் என் மகன். எதிரிகளை ஏமாற்ற அனாதை விடுதியில் இருந்து உன்னை எடுத்து மகனாக வளர்த்து நாடகம் நடத்தினேன் என்கிறார். நீ சாகும் நாள் தான் எனக்கு சந்தோஷம் என வெறுப்புக் கொட்டுகிறார்.

நிர்க்கதியாகும் வினய்க்கு காதலி காஜல் ஆதரவாகிறார்.அவர் யோசனைப்படி தந்தையுடனும் கொலைகாரக் கும்பலிடமும் மோதுவது கிளைமாக்ஸ்...பணக்கார இளைஞன் கேரக்டரில் கச்சிதமாய் பொருந்துகிறார் வினய்... காஜல் அகர்வாலை எடுபிடி வேலை செய்ய வைத்து ரசிப்பது ரசனை. வினய்யை கொல்ல கொலைகாரன் வரவழைக்கப்பட்டதும் விறுவிறுப்பு. தன்னை அனாதை என்று தந்தை சொல்வது அதிர்ச்சி திருப்பம். ஒரே நாளில் ஆடம்பர வாழ்க்கையை இழந்து தெருவுக்கு வந்து பரிதாபப்பட வைக்கிறார்.

காஜல் அகர்வால் துறு துறுவென அழகாய் பளிச்சிடுகிறார். கோடீஸ்வரர் மகனாக இருந்தும் அந்தஸ்தை அனுபவிக்காமல் சாகும் யுவா பாவம்.

சந்தானம், வி.எம்.சி ஹனீபா, மயில்சாமி சிரிக்கவைக்கின்றனர்.காட்சிகளில் ஸ்டைலும் விறுவிறுப்பும் ஏற்றிக் கதையை நகர்த்தியுள்ளார் இயக்குநர் சரண். இடைவேளையின் பின் அக்ஷன் ரூட்டுக்கு மாறிய கதையை தந்தை மகன் மோதலுக்கு உள்ளேயே சுழற்றி இருப்பது வேகத்தடை...


ஹரிகரன் -லெஸ்லி இசையில் வித்தியாசம். கருண் ஒளிப்பதிவு பிரமாண்டப்படுத்தப்படுகிறது.

# பரத்தின் சென்டிமென்ட்



பழனி, சேவல்,ஆறுமுகம்,திருத்தணி என தமிழ்க்கடவுள் முருகனையும், முருகன் சார்ந்த பெயர்களையும் தன் படங்களுக்கு வைக்கச் சொல்லி வற்புறுத்தும் நடிகர் பரத்துக்கு இன்னொரு சென்டிமென்ட்டும் இருக்கிறது அதுதான் சீனியர் சென்ட்டிமென்ட். பழனியில் குஷ்பு,சேவலில் சிம்ரன், ஆறுமுகத்தில் ரம்யா கிருஷ்ணன் என முன்னாள் நடிகைகளை தன் படத்தில்,அம்மா , அக்கா, அண்ணியாக ஆக்கி அழகுபார்க்கும் பரத் சீனியர் நடிகைகளிடமிருந்து அதிகமான விஷயங்களை தெரிந்துகொள்ள முடிகிறது என்கிறார்.

# அஜித்துக்கு ஜோடி ஸ்ருதிஹாசன்



நடிகர் கமல்ஹாசனின் கலை வாரிசு ஸ்ருதிஹாசன்,இந்தியில் நடிகர் இம்ரான்கானுடன் நடித்த லக் படம் வெளியாகி ஒருவாரம் கூட ஆகவில்லை. ஆனால் அவரை தமிழ் மற்றும் இந்தி பட வாய்ப்புகள் துரத்தத் தொடங்கி விட்டனவாம். லக் எதிர்பார்த்த அளவு போகவில்லை என்ற ஷாக் ஒரு புறம் இருந்தாலும்,அடுத்த படத்துக்கான வேலைகளில் இறங்கத் தயாராகிவிட்டாராம். ஸ்ருதி அடுத்து இந்திப் படமா, தமிழ்ப்படமா? என்ற குழப்பத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் ஹொலிவுட்டில் ஒரு புதிய செய்தி ஒன்று கிளம்பியுள்ளது.அல்டிமெட் ஸ்டார் அஜித்தின் அடுத்த படத்தில் ஸ்ருதி ஹாசன்தான் நாயகியாக நடிக்கவிருக்கிறார் என்ற செய்திதான் அது.

# இனி கிராமத்தான் வேடத்தில் நடிக்கமாட்டேன்: கரண்



நம்மவர் படத்தில் கமல்ஹாசனை எதிர்க்கும் மாணவனாக நடித்ததன் மூலம் தமிழ் ரசிகர்களிடையே பிரபலமானவர் நடிகர் கரண். அதன் பிறகு பல படங்களில் வில்லன் அவதாரம் எடுத்து பெண்கள் மத்தியில் வில்லன் இமேஜை உருவாக்கினார்.

அதன்பின்னர் சில காலம் ஒதுங்கியிருந்த அவர் ,தமிழ் சினிமாவுக்குள் ரீ-எண்ட்ரி ஆகி , கொக்கி , கருப்பசாமி குத்தகைதாரர் , தீ நகர் , மலையன் என அடுத்தடுத்து வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து நல்ல ஹீரோ இமேஜை பெற்றுள்ளார்.குறிப்பாக கருப்பசாமி குத்தகைதாரர் படம் கரணுக்கு தனி முத்திரையைப் பெற்றுத் தந்தது. கரண் தற்போது கனகவேல் காக்க ,கந்தா , தம்பி வெட்டோத்தி சுந்தரம் ஆகிய படங்களில் நடித்து வருகிறார். அடுத்தடுத்து கிராமத்தான் ஹேரக்டரில் நடித்து வரும் கரணுக்கு அந்த கேரக்டர் மீது வெறுப்பு வந்துவிட்டது போலும்.

இனி கிராமத்து கதை அம்சம் உள்ள படங்களில் நடிக்கமாட்டேன். நகரவாசியாகத்தான் நடிக்க விரும்புகிறேன். அக்ஷன் கேரக்டரில் நடிக்கத் திட்டமிட்டுள்ளேன் என்கிறார் கரண்.

# கன்னத்தை பதம் பார்த்த ஹீரோ



தொடர்ந்தும் பலர் தோல்விப் படங்களை கொடுத்து வரும் நடிகர் விக்னேஸ் இப்போது ஈஷா என்ற படத்தில்நடித்து வரு கிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு குற்றாலத்தில் நடைபெற்றது. இதில் விக்னேஷுக்கு ஜோடியாக லக்ஷனா நடிக்கிறார். பாலகணேஷா என்பவர் இப்படத்தை இயக்கி வருகிறார். படத்தில் காதலின் மிகுதியால் கதாநாயகி கன்னத்தைக் கடிப்பது போன்ற காட்சி படமாக்கப் பட்டது.

காட்சியைப்பற்றி விக்னேஷ் லக்ஷனாவிடம் விளக்கிச் சொல்லிய இயக்குனர் இந்தக் காட்சி தத்ரூபமாக வர வேண்டும்.... என்று சொன்னார்.

லக்ஷனாவின் கன்னத்தில் வாய்வைத்துகடிக்க ஆரம்பித்த விக்னேஷ் ஒரு கட்டத்தில் பலமாக கடித்துவிட்டார். லக்ஷனாவோ வலியால் அலறினார். இதைப் பார்த்த படப்பிடப்புக் குழுவினர் நன்றாக நடிக்கிறார்கள்... என்று நினைத்துக்கொண்டிருக்க லக்ஷனாவின் கன்னத்தில் இருந்து இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. இதனால் கோபம் அடைந்த லக்ஷனா ஹீரோவைத் திட்ட ஆரம்பித்தார்.

பின்பு இயக்குநர் தலையிட்டு சமாதானப்படுத்தினார்.

# கவர்ச்சிக்கு மாறிய சினேகா



குடும்பப்பாங்கான கேரக்டர்களில் வந்த சினேகா கவர்ச்சிக்கு மாறுகிறார். பல படங்களில் சேலை கெட்டப்பிலேயே இவரைப் பார்க்க முடிந்தது. ஆனந்தம்,பார்த்தீபன் கனவு, பிரிவோம் சந்திப்போம்,வசூல் ராஜா என அனைத்துப் படங்களிலும் அப்படித்தான் வந்தார்.சமீபத்தில் ரிலீசான பாண்டி படத்தில் மட்டும் போதையில் ஆடும் ஒரு குத்தாட்டத்தில் லேசான கவர்ச்சி காட்டினார்.

தற்போது பவானி ஐ.பி.எஸ் படம் மூலம் அக்ஷன் நடிகையாக மாறியிருக்கிறார்.

சக நடிகைகளான நயன்தாரா, ஸ்ரேயா, அனுஷ்கா, பிரியாமணி,நமீதா உள்ளிட்ட பலர் நீச்சல்உடைக்கு மாறிவிட்டனர்.இவர்களின் தாராளத்தால் இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் தங்கள் படங்களில் நீச்சல் உடைக் காட்சிகள் நிச்சயம் இருக்கவேண்டும் என்ற மன நிலைக்கு மாறிவிட்டனர்.

புது கதாநாயகிகளை இதற்கு சம்மதிக்க வைத்தே ஒப்பந்தம் செய்கின்றனர். இதனால் சினேகாவும் நீச்சல் உடையில் நடிக்கத் தயாராகிவிட்டாராம். சமீபகாலமாக கடுமையான உடற்பயிற்சி செய்து உடம்பை ஒல்லியாக மாற்றியிருக்கும் சினோகா,பிரபுவின் கோவா, படத்தில் நடிக்கிறார்.மலேசியா கடற்கரைப் பகுதிகளில் படப்பிடிப்பு நடக்கிறது.இதில் சினேகா முதல் தடவையாக நீச்சல் உடையில் வருகிறாராம்.

# இல்லறத்தில் சுமூக நிலைக்கு மனப்பகிர்வு அவசியம்




திருமணம் என் பது ஆயிரம் காலத் துப் பயிர் என்பார்கள். ஒரு புதிய குடும்ப அலகின் ஆரம் பமே திருமணம் தான். பரஸ்பர நல்லிணக்கத் துடன் ஆரம்பிக்க வேண் டிய திருமண பந்தம் இன்று பல அழுத்தங்களு டனே ஏற்படுகின்றது வேத னைக்குரியது. திருமணங் கள் சொர்க்கத்தில் நிச்ச யிக்கப்படுவதாகச் சொல் வார்கள். ஆனால் இன்று திருமணங்கள் முக்கிய மாக சீதனத்தினால் நிச்ச யிக்கப்படுகின்றன.

அழகு, பண்பு, அறிவு, பதவி முதலான பெண்களின் தகை மைகள் எல்லாம் இரண்டாம் பட்சமாகப் போய்விட்டன. சோதிட மும், சாதியும் அடுத்தபடியாக திருமணங்களைத் தீர்மானிக் கின்றன.

திருமணம் ஏற்படுத்தும் உறவில் உடல்களில் அந்தரங்கங் கள் பகிரப்படுவது போலவே மனங்களும் பகிரப்பட வேண்டும். ஆணாதிக்க சிந்தனையின் பிடியிலிருந்து இன்னமும் விடு படாத இந்து உலகில் பெண் தனது மனத்தை முழுமையாகப் பகிர்ந்து கொள்ள முடியாதவளாக இருக்கிறாள். பண்பாட்டு விழுமியங்களும் பெண் மீதான கட்டுப்பாடுகளும் பெண் தனது மனதைப் பகிர்வதில் இடைஞ்சலாக உள்ள அதே வேளை ஆண்களோ பெண் களை ஒரு பொருட்டாகக் கருதிப் பல விடயங்களைப் பகிர்ந்து கொள்வதில்லை.

**கணவன் மனைவி இருவரும் பரஸ்பரம் மனதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்**

ஒரு குடும்பத்தில் இனிய தென்றல் வீச வேண்டுமா னால் ஆண், பெண் இரு வரும் எதையும் தம்மிடையே பகிர்ந்து கொள்வதில் தயங்கக் கூடாது. தயக்கம் ஏற்படக் கூடியதாக இருவரும் எச்சந்தர்ப் பத்திலும் நடந்து கொள் ளாமலிருப்பின் இது சாத்தியமாகும். எனினும் பகிர்ந்து கொள்ளும் விடயங்களிலும், முறைகளி லும் அவதானம் இருக்க வேண்டும். சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது சிந்தித்துக் கவனமாக பரிமாறிக் கொள்ள வேண்டும்.

திருமண வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படுவது சகஜமே. சில புறச் சூழ்நிலைகளாலும், சில அகச் சூழ்நிலைகளாலும் ஏற்ப டும். ஆனால் பல சமயங்களில் பலமான அடிப்படைக் காரணம் எதுவுமின்றியே சச்சரவுகள் ஏற்படும்.

இருவேறு முரண்பட்ட சூழ்நிலைகளிலிருந்து வருபவர்கள் ஒருவரை ஒருவர் அனுசரிப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்களே இவ்வாறான அநாவசியமான முரண்பாடுகளுக்கு வித்திட்டு நிற்பது தெரிகிறது.

உளவியல் ரீதியிலான அணுகுமுறைகள் பல சந்தர்ப்பங்க ளில் மோதலைத் தவிர்க்க பெரிதும் உதவக்கூடியதாகும்.

பிற பெண்கள் பற்றி கணவரும், பிற ஆண்கள் பற்றி மனை வியும் பாராட்டிப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உதாரணமாக மனைவி முன் ஒருத்தியை அழகு என்று பாராட்டிப் பேசக்கூடாது.

பிற ஆண்களின் திறமைகளைப் பற்றிப் பாராட்டும் போது மனைவியரும் அவதானமாக இருக்க வேண்டும். அப்படிச் சொல்ல நேரிடும் போது கூட உன்னைப்போல, உங்களைப் போல என்ற அடைமொழியைப் பாவிக்கலாம்.

எப்போதும் உன் நினைப்புடனே வாழ்கிறேன். உனக்காக வாழ்வதில் எனக்குப் பேரின்பம் என்று கணவர்மார் கூறலாம்.

ஏழேழு ஜென்மத்திலும் நீங்கள் தான் எனக்கு துணைவ ராக வாய்க்க வேண்டும் என்று கணவனின் மனம் மகிழ மனைவியும் கூறலாம்.

அன்பை மனதில் பொத்தி வைத்திருப்பதில் அர்த்தமில்லை. அடிக்கடி உனக்காகவே வாழ்கிறேன். நீ என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறாய். எனக்காய் அயராது உழைக்கிறாய் என் றெல்லாம் துணைவர் பாராட்டினால் எந்த மனைவிக்குத்தான் உச்சிகுளிராது? அதே போலத்தான் மனைவியரும் கண வனை புகழ பாராட்ட பின்நிற் கக்கூடாது. இது போலித்தனம். அவசியமற்றது என்று யோசிக் காதீர்கள்.

துணையின் செயற்பாடுகள் மனநிறைவைத் தரும் வேளைகளில் எல்லாம் கட்டாயமாகப் பாராட்ட வேண்டும். அதற்காக செயற் கையாக நன்றி சொல்ல வேண்டும் என்று அர்த்த மில்லை.

பிரிந்திருக்கும் வேளைகளில் கடித மூலம் மனவுணர்வு களைத் தெரிவிக்க வேண்டும். என் நினை வுகள் எல்லாம் உன்னைச் சுற்றிச் சுற்றியே வருகிறது. எதிலும் உன் ஞாபகம் தான் வருகிறது. நீ அருகில் இல்லாததைப் பெரி தும் உணர்கிறேன் என்று பாராட்டி எழுத வேண்டும். தொலைத் தொடர்பு மூலம் இடைக் கிடை எனினும் அன்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். எவ்வளவு தான் வேலைப்பளு என்றாலும் மனை வியரும் இவ் வாறே மன உணர்வுகளைப் பரிமாற வேண்டும். நீங்கள் இந்த நேரம் அருகில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இன்று உங்களைக் கனவில் கண்டேன் என்றெல்லாம் மனம் திறந்து கூற வேண்டும்.

எதையும் எப்பொழுதும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற சுதந்திர நிலைப்பாடே கணவன் மனைவியரிடையே ஒட்டு தலை ஏற்படுத்தும். துணைவருக்குப் பிடித்த மாதிரி நடத்தல், பிடித்த விடயங்களைச் செய்தல், பிடித்த மாதிரிக் கதைத்தல் என இருபாலாரும் நடந்தால் இல்லற வாழ்வு இனிக்கும்.

பிடிக்காத விடயங்களைக் கதைக்கும் போது பிடிக்கக்கூடிய முறையில் சமய சந்தர்ப்பம் பார்த்துக் கதைக்கலாம்.

இதற்கு பரஸ்பர புரிதல் தான் வேண்டும். ஒருவருக்கு ஒரு வர் சுயமரியாதையைப் பாதிக்காதவாறும் தன்னம்பிக்கை ஏற் படும் வண்ணமும் நடந்தால் இல்லறம் சிறக்கும்.

ஒருவர் தரப்பு உறவினர்களை மற்றவர் மதித்து நடத்தலும் முக்கியமாகும். கூடுமானவரை பிடிக்காதவற்றை வலியுறுத்து வதைத் தவிர்க்க வேண்டும். அநாவசியமாக எடுத்தற்கெல்லாம் தலையிடுகிறாளே என்று கணவனும், இவர் ஆக்கிரமிப்புடன் நடக்கின்றாரே என்று மனைவியும் எண்ணும்படி நடக்கக் கூடாது உரிமை என்ற பெயரில் எதுவித திணிப்புகளும் இருக் கக்கூடாது. துணைவருக்குப் பிடித்தமாதிரி தம்மை மாற்றிக் கொள்ள இருவரும் தயங்கக்கூடாது.

தன்முனைப்புடன் செயற்படுவதும், ஈகோ பார்ப்பதும் ஒரே கட்டிலைப் பகிர்கின்ற, உடல் தேவைகளைப் பரிமாறுகின்ற பாசமிகு உறவுகளுக்கிடையே இருக்கலாமா என்ற யோசியுங்கள்.

தெளிவான தீர்க்கமான முடிவெடிக்கவும், பொருத்தமான ஆலோசனைகளைப் பொருத்தமான வேளையில் விரும்பி ஏற்கக்கூடிய வகையில் சொல்லவும் வேண்டும்.

பல விடயங்களில் பரஸ்பர உரையாடல் அமைதிக்கு வழிவகுக்கும். தனது முடிவே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தாமல் நல்லது தீயது எதுவென ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டம்.

ஒரு குடும்பத்தின் வெற்றிக்கு இது பெரிதும் உதவும். தாம்பத்தியத்தில் இப்பரஸ்பர உதவியும், ஆலோசனையும், ஆறுதலும் நெருக்கத்தை அதிகரிப்பதோடு அன்பு, பாசம், மதிப்பு, மரியாதை என்பவற்றை ஒருவர் மீது மற்றவருக்கு அதிகரித்திட வழிவகுக்கும். அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் பெண்ணியச் சிந்தனைகளும், பெண்களின் விழிப்புணர்வும் சிலவேளைகளில் சில முரண்பாடுகள் ஏற்பட ஏதுவாகின்றன.

வழக்கிலிருந்து வந்த முறைகள் மாற்றம் காணும் போது அதை இலகுவில் ஏற்றுக் கொள்வதிலுள்ள சிக்கலே இதற்குக் காரணம். பெண்ணுரிமை என்ற பெயரில் பெண்களும் எடுத்த எடுப்பில் தன்னிச்சையாக நடப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆண்களும் பெண் விடுதலை சமசுதந்திரம் என்பவற்றிலுள்ள நியாயத்தன்மையைப் புரிந்து கொண்டு சில விட்டுக் கொடுப்புகளைச் செய்யத் தயங்கக் கூடாது.

பல விடயங்கள் சுமுகமான தீர்வை எட்ட பரஸ்பர மனப் பகிர்வு பெரிதும் உதவும். எனினும் மனதைப் பகிரும் போது வாதாடக்கூடாது.

அதிக அழுத்தத்தையும் தொனியையும் தவிர்க்க வேண் டும். விட்டுக் கொடுக்காமல் வாதிடும் போது பிரச்சினைகள் வலுப்பெறும். துணையின் மனநிலையை அதன் பாதிப்பை நெகிழ்வுத் தன்மையை அவதானித்தே சில விடயங்களை உரை யாட வேண்டும். பரஸ்பர உரையாடல் பிரச்சினையை உருவாக் கும் போல் தென்பட்டால் அதை உடனும் நிறுத்தி பிறிதொரு சந்தர்ப்பத்தில் உரையாடலாம். வார்த்தைப் பிரயோகங்களில் மிகுந்த அவதானமும் பொறுமையும் இருக்க வேண்டும். அப் படியாயின் வாழ்வு வசந்தமாகும்.

# குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்

குழந்தைகள் தங்கள் எண்ணத்தை வார்த்தைகளாக, சைகைகள் மூலமாக, நடத்தைகள் மூலமாக வெளிப்படுத்தும் திறன் கொண்டவை. அவர்கள் பேசும்போது நாம் அவர்கள் பேசு வதற்குத் தடை போடாமல் கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர்கள் பேசுவதிலிருந்து நடந்து கொள்ளும் முறை யிலிருந்து அவர் கள் என்ன சொல்ல வருகின்றனர் என் பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



ஒரு குழந்தை உங்களி டம் அதிகம் பேசவில்லை என்றால் நீங்கள் அதன் பேச்சை அவ்வளவாகக் கேட் பதில்லை என்று அர்த்தம். இல்லையேல் அதற்குப் பேச வேண்டும் என்று தோன்றும் போதெல்லாம் நீங்கள் அதன் அருகில் இருப்பதில் லை என்று அர்த்தம்.

குழந்தைகளின் பாதுகாப்புக்கு பெற்றோர் ரொம்பவே அவசி யம். குழந்தைகளுக்கு சிரமம் ஏற்படும் போதெல்லாம் அந்த சிரமத்திலிருந்து குழந்தை மீளும்வரை அதற்குப் பாதுகாப்பாய், அனுசரணையாய் இருக்க வேண்டியது பெற்றோரின் கடமை.

எனவே குழந்தை எதைச் சொன்னாலும் முதலில் காது கொடுத் துக் கேளுங்கள். குழந்தைகள் பெரிய தவறு செய்ய நேர்ந்தால் கூட குழந்தையைத் திட்டாமல் இதமாய் எடுத்துச் சொல்லி தவ றைத் திருத்துங்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை**

**உங்கள் குழந்தையை நம்புங்கள்.**

தங்களுக்குக் கொடுமை இழைக்கப்பட்டால் அது குறித்து குழந்தைகள் வெளியே சொல்ல மாட்டார்கள். சொன்னால் பெரிய வர்கள் நம்பமாட்டார்கள் என்ற எண்ணம் தான் இதற்குக் கார ணம்.

குழந்தைகளை நீங்கள் முழு மையாக நம்புகிறீர்கள் என்ற எண்ணம் குழந்தைகளுக்கு வந் தால் தான் எல்லா விபரங்களை யும் சொல்லும் மனப்பான்மை குழந்தைக்கு வளரும். இது உன் தவறு இல்லேம்மா... நான் உன்னை நம்புறேன் என்று குழந்தை தவறு செய்யும் போதெல் லாம் இதமாய் பிரச்சி னையைக் கையாள முற்பட்டால் சிக்கலே இல்லை.

**அமைதியாய் இருங்கள்.**

நீங்கள் பேசும்போது உங்கள் முகத்தையே பார்க்கும். நீங்கள் சிரிக்கும் போது சந்தோஷமாய் சிரிக்கும். நீங்கள் ஆவே சப்படும்போது பயப்படும். இதுதான் குழந்தையின் தன்மை.

உங்களிடம் உண்மையை மறைக்கும் குழந்தையின் மனதில் என்ன இருக்கிறது தெரியுமா? ஒரு பிரச்சினையை உங்களிடம் சொன்னால் நீங்கள் அதை சரியான முறையில் கையாளமாட் டீர்கள் என்ற அவநம்பிக்கைதான்! எந்த விடயத்தைக் குழந்தை உங்களிடம் சொன்னாலும் கோபப்படாதீர்கள். அமைதியாக இருங்கள். நீங்கள் அமைதியாக இருந்துவிட்டாலே குழந்தைகள் உங்களிடம் விடயத்தை வெளிப்படையாகச் சொல்லத்துவங்கும். இது ஒண்ணும் பெரிய விடயம் இல்லேம்மா நீ ஏன் வருத்தப்ப டுறே? எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதே! என்று சொல்லுங் கள். குழந்தை மன நிம்மதி பெறும்!.

**குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.**

சிறுவயது முதலே குழந்தைகள் பிரச்சினையை உங்களிடம் சொல்ல வந்தால் அதை ஆவலுடன் கேட்க வேண்டியது அவசி யம். அதே போல் குழந்தை சொன்ன விடயத்தை வேறு யாராவது ஒருவர் மூலம் கேட்கும்போது அவர்கள் விடயத்தைத் திரித்துச் சொன்னால் அதை நீங்கள் அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டால் தீர்ந்தது கதை! குழந்தை சொல்வதை நீங்கள் 100 சதவீதம் நம்புகிறீர்கள் என்று குழந்தைகள் தீர்மானித்த பிறகு தான் உங்களை சிறந்த நண்பர்களாக ஏற்றுக் கொள்ளும் தைரியம் வேணும் சொல்லு... அம்மா இருக்கிறேன் உனக்குத் துணையாக. எதுவாக இருந்தாலும் நான் இருக்கிறேன் என்று சொல்லி தைரியப்படுத்த வேண்டும்.

# படையிலிருந்து தப்பிச் சென்றவர்கள் சேவையிலிருந்து விலக கால அவகாசம்

## இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

படையிலிருந்து தப்பிச் சென்ற இராணுவவீரர்கள் சட்ட ரீதியிலான முறையில் இராணுவ சேவையிலிருந்து விலகிச் செல்வதற்கான கால அவகாசத்தினை இராணுவ தலைமையகம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் எதிர் வரும் 24 ஆம் திகதி முதல் செப்டம்பர் 14 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இவர்கள் சேவை யிலிருந்து விலகிக்கெள்ளலாம் என்றும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இராணுவ சேவையிலிருந்து விலகிச் செல்ல விரும்புபவர்கள் தமது பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குச் சென்று இராணுவ சேவைக்காக சீருடைகள், ஆவணங்கள் மற்றும் உபகரணங்களைக் கையளித்து சட்டரீதியாக சேவையிலிருந்து செல்லாம் என்றும் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் இராணுவ தலைமையகம் மேலும் அறிவித்துள்ளதாவது,

இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த நிலையில் விடுமுறைக்காக வீடு சென்று மீண்டும் சேவைக்கு திரும்பாதவர்கள் மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கும் போதே அங்கிருந்து தப்பிச் சென்றவர்கள் என்று 1,993 வீரர்கள் அண்மையில் இராணுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களுக்கு மூன்று மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முப்படையினருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்தார். இந்தத் தீர்மானத் திற்கு அமைய கடந்த திங்கட் கிழமை முற்பகல் 11.15 மணியள வில் மேற்படி 1,993 வீரர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் எதிர்காலத்தில் மீண்டும் இராணுவ சேவையில் ஈடுபடாது நிரந்தரமாக சேவையிலிருந்து சட்டரீதியாக விலகிச் செல்வதற்கான ஏற்பாடுகளை இராணுவத் தலைமையகம் மேற்கொண்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஆகஸ்ட் 24 ஆம் திகதி முதல் செப்டம்பர் 14 திகதி வரையான காலப் பகுதிக்குள் இவர்கள் சேவையில் இருந்து விலகிக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# ஆசிரியர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாவிப்பதற்கு தடைவிதிக்கும் தீர்மானம் அமுல்படுத்துக

## பிரிடோ நிறுவன வெளிக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் வகுப்பறை நேரங்களில் ஆசிரியர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாவிப்பதற்குத் தடைவிதிக்கும் தீர்மானத்தினை மத்திய மாகாணத் தமிழ் கல்வியமைச்சு உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்று பிரிடோ நிறுவன வெளிக்க இணைப்பதிகாரி எஸ்.கே. சந்திரசேகரன் தெரிவித்தர். மலையக கல்வி வளர்ச்சியில் எதிர்நோக்கப்படும் புதிய பிரச்சினைகள் என்ற தலைப்பில் அட்டன் சக்தி மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரிடோ நிறுவனத்தால் சிறுவர் கழக உறுப்பினர்களுக்கா நடத்தப்படும் பல்வேறு அறிவூட்டல் நிகழ்வுகளின் போது வகுப்பு நேரத்தில் ஆசிரியர்கள் கையடக்கத் தொலைபேசியல் பேசுவது தங்களின் கல்விக்கு பெரிதும் தடையாக இருப்பதாகவும் சில சந்தர்ப்பங்களில் தொலைபேசி அழைப்புக்கள் வந்தால் சில ஆசிரியர்கள் அத்துடன் பாடம் நடத்துவதை நிறுத்தி விடுவதாகவும் குறைகூறும் மாணவர்கள் இதனால் கல்வி பெறுவதற்கான தமது உரிமை மறுக்கப்படுவதாகக் கூறிவருகிறார்கள்.

பொதுவாக ஆலோசனைக் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பன நடைபெறும் போதுகூட அவை முடிவடையும் வரை கையடக்கத் தொலைபேசிகளை இயங்காமல் செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் பங்குபற்றுவோரிடம் கோருகிறார்கள் பல அரசு காரியாலங்களுக்கு உள்நுழையும் போதும் இவ்வாறான வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. அந்தக் கோரிக்கை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சாதாரண கூட்டங்களின் போது கூடஇவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டு அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடை முறைப் படுத்தப்படும்போது இது விடயத்தில் ஆசிரியர்களே சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட்டு கையடக்கத் தொலைபேசிகளை இயக்காமல் வைத்திருக்க முன்வருவதே சிறந்தது.

இதேவேளையில் பாட நேரத்தில் ஆசிரியருக்கு தொலைபேசி அழைப்பு விடுப்பது ஒரு சமூக விரோத செயலாகக் கருதும் மனப்பாங்கை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும் என்றார். (ஓ-4)

# பொதுத் தேர்தலை நடாத்தி மக்கள் ஆதரவை நிரூபிக்கட்டும்

## அரசுக்கு ஐ.தே.க.சவால்

அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் பின்னால் சென்று பதவிகளையும் சலுகைகளையும் வழங்கி அரசாங்கத்துக்கு ஆதரவு தேடுவதை விடுத்து முடிந்தால் பொதுத் தேர்தலை நடத்தி மக்கள் ஆதரவினை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சவால் விடுத்துள்ளார்.

ஐ.தே.க.விலிருந்து யார் வெளியேறினாலும் கட்சியினை அழிக்க எவராலும் முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

18 ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் அரசாங்கத்துடன் அடுத்த வாரம் இணையவுள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்த்தன கருத்து தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்து கேட்ட போதே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியில் ஆதரவும் பிரபல்யமும் இருப்பதாக சொல்கிறார்கள். அப்படியானால் ஏன் ஐ.தே.கட்சிக்காரர்கள் பின்னால் சென்று ஆதரவு வழங்க வேண்டுமென பிச்சை கேட்கிறார்கள்.

அதற்காக பதவிகளையும் பட்டங்களையும் லஞ்சமாக வழங்குகிறார்கள். இன்று இந்த அரசாங்கத்தின் இருப்புக்கு யார் காரணம். ஐ.தே.க. கட்சிக்காரர்கள் பின்னால் சென்று ஆதரவு வழங்க வேண்டுமென பிச்சை கேட்கிறார்கள்.

அதற்காக பதவிகுளையும் பட்டங்களையும் இலஞ்சமாக வழங்குகிறார்கள். இன்று இந்த அரசாங்கத்தின் இருப்புக்கு யார் காரணம் ஐ.தே.கட்சியிலிருந்தும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்தும் ஜே.வி.பி.யிலிருந்தும் பிரித்தெடுத்தவர்களே காரணமாகும்.

அத்தோடு நாடு முழுவதும் ஒரே யடியாகத் தேர்தல்களை நடத்தாது கூட்டம் கூட்டமாக நடத்தி அனைத்து அரச வளங்களையும் பயன்படுத்தி ஊழல் மோசடிகள், கள்ள வாக்குகள் என அனைத்து மோசடிகளையும் அரங்கேற்றி தேர்தல்களில் அரசாங்கம் வெற்றி பெறுகிறது.0 (ச-5)

# 'வயது வந்தவர்களுக்கு' என்ற திரைப்படங்களின் தடை; கலையம்சம் கொண்ட படங்களை திரையிட முடியாத நிலை

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

வயது வந்தவர்களுக்கான திரைப் படங்கள் தடை செய்யப்பட்டால் கலையம்சம் கொண்ட படங்களை திரையிட முடியாத ஓர் நிலை ஏற்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

உயரிய கலையம்சம் கொண்ட பெரியோர்களுக்கான திரைப்படங்களை இயக்க கலைஞர்கள் பின் வாங்கக் கூடிய ஓர் சூழ்நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஆபாச திரைப்படங்களை தடை செய்வதில் தவறில்லை என்ற போதிலும் வயது வந்தவர்களுக்கு என்ற தலைப்பில் திரையிடப்படும் சகல திரைப்படங்களையும் தடை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது என



அவர் தெரிவித்துள்ளார்.

ஆழமான கருத்தாக்கத்தை உடைய சில திரைப்படங்கள் சிறுவர்களுக்கு உசிதமானதல்ல எனவும் அவற்றை ஆபாச படங்களாக அடையாளப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 7 ஆம் திருவிழா



## வாடிநிற்கும் அடியவர்க்கு வரமளித்து காத்துவிடு

"வேலவனே! மாலவனே! வினைதீர்க்கும் தூயவனே!
மயில் வாகனனே! வள்ளி மணவாளா! வடிவேலா !
அல்லல் தீர்த்துவைக்கும் ஆறுதிருமுருகா !
அணைத்திடுவாய் உறவுகளை அறுத்திடுவாய் துயரங்களை"

பழனி முருகன் நீ பால் வடியும் முருகன் நீ
வள்ளி மணவாளன் நீ, வடிவேல் முருகன் நீ!
வாடி நிற்கும் அடியவர்க்கு
வரம் அளித்து காத்து விடு"

திருமதி கி.சரவணபவன், மண்டைதீவு

## நெஞ்சுருக வேண்டுகிறோம்

நல்லூரில் வீற்றிருக்கும் ஞானக் கந்தா!
நானிலம் போற்றுகின்ற நல்லூர்க் கந்தா!
நின்னையே நம்புகின்றோம் நல்லூர்க் கந்தா!
நீயே எமைக் காக்க வேண்டும் நல்லூர்க் கந்தா!
நுவலரும் அற்புதங்கள் புரிந்தாய் கந்தா !
நூல்களிலே பெருமை பெற்ற நல்லூர்க் கந்தா !
நெஞ்சுருக வேண்டுகின்றோம் நல்லூர்க் கந்தா!
நேர்மை, வெற்றிபெற வைப்பாய் நல்லூர்க் கந்தா!
நொந்து மனம் வெம்புகின்றோம் நல்லூர்க் கந்தா!
நோயில்லா வாழ்வருள்வாய் நல்லூர்க் கந்தா!
நம்பிவரும் அடியவர்க்கு பாலஸ்கந்தா !
நலமே அளித்திடுவாய் அலங்காரக் கந்தா !

அளவெட்டி ஞானசுதன் ரமாஜி, வர்த்தனா

## நல்லூர் உறையும் செவ்வனே முருகா

நல்லூர் உறையும் செவ்வனே முருகா
நல்வித்தை யருளும் ஞான முதல்வனே குகனே
எத்தாயு மெமர்க்கருள் தந்தையுமாய் மிளிர்ந்தே விளங்கும்
செந்தூர்ப் பெருமானே நல்லூர் முருகனே

நல்லூர் தனில் ஆவுடையார் பதியினிலே
கோல மயிலாட கும்பிடுமுன்னடியார்
பாவ வினையறுத்து பரகதி காட்டும்
ஈசன் திருமகனே எமைக் காத்தருள் கோவே

வ.சிவாஜி,தேனூர்

## பக்தர் குறைதீர்க்கும் நல்லூரானே போற்றி

நல்லையிலே பவனிவரும் கந்தனே போற்றி !
நன்மை பல செய்திடும் கடம்பனே போற்றி !
வானுயர வலம் வந்த கதிர்வேலவனே போற்றி !
வையகத்தின் விடிவான குமரனே போற்றி !
ஆதி அந்தமில்லா திருப்பெருந்துறை
சிவனின் மைந்தனே போற்றி ! போற்றி !
நல்வாழ்வின் விடியலுக்காய் பக்தர்
குறைதீர்க்கும் நல்லூரானே போற்றி ! போற்றி !

வல்வை மு.ஆ.சுமன்

## போனதெங்கே எமைத்துவிக்க விட்டு?

சங்கரனின் குமரோனே ஐங்கரனின் இளையோனே!
எங்குற்றாய் எமைத்தவிக்க விட்டு?

மலைமகளின் புதல்வோனே வானவர்கோன் முருகனே!
மறைந்ததெங்கே எமைப் பரிதவிக்க விட்டு?

வேலோடு வந்ததெங்கள் வேதனைகள் துடைக்காது
போனதெங்கே எமைத்துயரில் விட்டு?

முருகு

பெரும்பகை தனைப்போக்கி ஆனந்தம்
தருவாய் நல்லூர்க் கந்தா !



யாழ்ப்பாண பலநோக்கு
கூட்டுறவுச் சங்கம்
காங்கேசன்துறைசாலை
யாழ்ப்பாணம்.

# பங்குச் சந்தை ஓர் அறிமுகம்

(நேற்றைய தொடர்ச்சி)

உண்மையிலேயே CDS என்பது ஓர் வைப்பகம்(Depository) ஆகும். முதலீட்டாளர்களால் வைப்புச் செய்யப்படும் பங்குகள் தொகுதிக் கடன்கள் அவர்களின் பெயர்களிலேயே வைத்திருக்கப்படும். முதலீட்டாளர்கள் பங்குகளின் தொகுதிக்கடன்களின் உடமையாளர்களாக இருப்பதனை CDS குறிப் பிட்ட கம்பனிகட்கு காலத்திற்குக்காலம் அறியப்படுத்துகின்றது. இதனால் அக்கம்பனிகளில் இருந்து முதலீட்டாளர்களுக்கான பங்கிலாபம் வழங்கல் மற்றும் ஆண்டறிக்கைகளை அனுப்பி வைத்தல் என்பன இலகுவாக்கப்பட்டுள்ளது.

### CDS கணக்கு ஒன்றை எவ்வாறு ஆரம்பிப்பது?

நீங்கள் கணக்கு திறக்கும் படிவம் (Account Opening Form) ஒன்றைப் பெற்று செய்தல் வேண்டும் பங்குதரகர்கள் அனைவரிடமும் இப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்த படிவத்தினை பங்குத் தரகர்கள் ஊடாக மத்திய வைப்புத் தொகுதிக்கு அனப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட்டு இரண்டு நாட்களுக்குள் உங்கள் பெயரில் கணக்கு ஆரம்பிக்கப்படும். விரும்பின் கூட்டுக் கணக்குகளையும் (Joint Accounts) ஆரம்பிக்கலாம். CDS கணக்குகளை ஆரம்பிப்பதற்காக கட்டணம் அறவிடப்படுவதில்லை.

CDS, கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு உங்கள் தேசிய அடையாள அட்டையின் (NIC) ஒளிப்படப் பிரதி (Photo copy) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (மின்சாரப்பட்டியல் / தொலைபேசிப் பட்டியல்/ கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ்) ஒன்றையும் தரகரிடம் கொடுப்பதுடன் பரிசீலனை செய்வதற்காக தேசிய அடையாள அட்டைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். அடையாள அட்டைஇல்லாதவிடத்து கடவுச் சீட்டு (Passport) உறுதிப்படுத்தல் ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

தரகர்கள் அனைவருக்கும் இலங்கையின் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு உரிமம் வழங்கியுள்ளது.தரகர்கள் பயிற்றப்பட்ட பதவியினரை பணிக்கமர்த்தியுள்ளார்கள். அவர்கள் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினதும கொழும்புப்பங்குப் பரிவர்த்தனையினதும் விதிகள், பிராமணங்களுக்கு அமைவாகத் தொழிற்படல் வேண்டும்.

எல்லா வாடிக்கையாளர்களும் சமமாக எந்த வேறுபடுத்தல்களும் இல்லாமல் கணிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தரகர்களிடம் நடவடிக்கை முறைகள் உள்ளன. உங்களிடம் தரகர்கள் தொடர்பான முறைப்பாடுகள் ஏதுமிருப்பின் அதனை முதலில் தரகரது இணக்க உத்தியோகத்தரிடம் தெரிவித்தல் வேண்டும். இணக்க உத்தியோகத்தர் உங்களுக்கு உதவக்கூடியவராக இருந்து முறைப்பாட்டை தீர்வு செய்வார்.

### இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு என்றால் என்ன?

### What is the Securities and Exchange Commission (SEC) of Srilanka?

இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக் குழுவானது பிணைப் பொறுப்புக்களை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்வதற்கென அரசினால் அமைக்கப்பட்ட ஓர் நியதிச் சபை (Statutory Body) ஆகும்.

### இலங்கை பிணைகள் ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்?

### Objectives of the SEC ?

- நியாயமான ஒழுங்கான பிணைப் பொறுப் புச் சந்தை ஒன்றை உருவாக்கிப் பராமரித்தல்.
- சந்தையை ஒழுங்குபடுத்துதல்.
- சந்தையில் தொழில் சார் நியமங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்தல்.
- முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல்.
- தரகர் நிறுவனம் ஒன்று முறிவடையும் பட்சத்தில் அதனால் குறித்த முதலீட்டாளருக்கு ஏற்படும் நிதி இழப்புக்களில் இருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கு நட்ட இழப்பீட்டு நிதியம் (Compensation Fund) ஒன்றை தொழிற்படுத்துதல்.*
- கம்பனி இணைவு மற்றும் கம்பனி கொள்வனவுகளின் போது கட்டாயப் பொது வழங்கல் மூலம் (Mandatory public offer) சிறு முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல்.

இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தத்துவங்கள் சார்பு முறையாகப் பரந்தவை.அவை அங்கு பங்குப் பரிவர்த்தனை நிலையம் மீதும் தரகர்கள் மீதும், நம்பிக்கைப் பொறுப்புக்கள் முகாமைக் கம்பனிகள் மீதும் நிரற்படுத்திய கம்பனிகள் மீதும் ஒழுங்குபடுத்தல் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

### பங்குகளைக் கொள்வனவு செய்யும் போதுள்ள கடப்பாடுகள் யாவை?

நீங்கள் பங்குகளைக் கொள்வனவு செய்து 3 சந்தை நாட்களுக்குள் அதற்குரிய கொடுப்பனவை செலுத்துதல் வேண்டும்.

நீங்கள் புதிய முதலீட்டாளர்களாகக் காணப்படும் பட்சத்தில் பங்குதாரர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்டளவு முற்பணத்தில் செலுத்துமாறு கேட்கப்படலாம்.

### பங்குகளை எப்படி விற்க முடியும்?

பங்குகளை வாங்குகின்ற அதே நடைமுறையில் நீங்கள் பங்குத்தரகரிடம் தொடர்பு கொண்டு நீங்கள் விற்க விரும்பும் பங்குகளை வழங்கிய கம்பனியின் பெயர், பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அப் பங்குகளுக்கு பெற விரும்பும் விலை போன்ற விபரங்களை தெரியப்படுத்தல் வேண்டும். பங்குத் தரகர் உங்கள் வேண்டுகோளை மிக விரைவில் சாத்தியப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் நிறை வேற்றுவார்.

பங்குகள் விற்பனை செய்யப்பட்டு 3ஆம் சந்தை நாளில் உங்களுக்குரிய கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்படும்.

### பங்கு வியாபார நடவடிக்கைகள் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன?

### How is the share trading activity conducted?

பங்கு வியாபாரமானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தெளிவானதும், வினைத்திறன் வாய்ந்ததுமான இலத்திரனியல் திரையுடன் கூடிய தன்னியக்க வியாபார முறைமையினூடாக (Automated Trading System-ATS) மேற்கொள்ளப்படுகின்றது.

இம்முறைமையினூடாக பங்குத்தரகர்கள் தமது அலுவலகத்தில் இருந்து பங்கு வியாபாரத்தினை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.நீங்கள் பங்குகளை வாங்க அல்லது விற்க விரும்பினால் உங்கள் கட்டளைகளை தொலைபேசி அல்லது தொலைநகல் (fax) ஊடாகவோ அல்லது நேரடியாக சமுகமளித்து பங்குத்தரகருக்கு தெரியப்படுத்த முடியும்.

அதன் பின்னர் பங்குத்தரகர் உங்களது கட்டளைகளை அவருடைய அலுவலகத்தில் உள்ள கணனி மூலம் இட முடியும். அக் கட்டளையானது இலத்திரனியல் முறைமை மூலம் உடனடியாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தரவுத் தளத்திற்கு (Data base) பரிமாற்றப்படும்.

ஏற்கனவே தரவுத்தளத்தால் கொள்வனவுக் கட்டளைக்கு ஒத்ததான விற்பனைக் கட்டளை ஒன்று இணங்கும் போது பங்குப் பரிமாற்றம் உடனடியாக நிறைவேற்றப்படும். பின்னர் பங்குகள் கொள்வனவு, விற்பனை செய்யப்பட்டதற்கான உறுதிப்படுத்தல் படிவம் ஒன்று உங்களுக்கு பங்குத்தரகரால் அனுப்பி வைக்கப்படும்.

உங்களுடைய கட்டளைக்கு இணையக் கூடிய இன்னும் ஒரு கட்டளை வியாபார முறைமையின் தரவுத் தளத்தில் காணப்படவில்லையாயின் உங்கள் கட்டளை தொடர்ந்து ஆகக் கூடியது 5 நாட்களுக்கு அல்லது நீங்கள் கோரும் வகையில் தரவுத் தளத்தில் பேணப்படும். வேறு ஒரு முதலீட்டாளரிடம் இருந்து இதற்கு இணையத்தகு கட்டளை பெறப்படுமாயின் உடனடியாகப் பரிமாற்றம் நிகழ்த்தப்படும்.

முன்னர் விதந்துரைக்கப்பட்டவாறு பங்குச்சந்தையின் நகர்வுகளை கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் இணையத்தளத்தினூடாகவோ அல்லது பங்குத்தரகரின் அலுவலகத்திற்கு சமூகமளித்தோ அல்லது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் முதலீட்டாளர் சேவை நிலையமாகத் தொழிற்படும். (Investor Services centre) எந்தவொரு கிளை அலுவலகத்திலும் அவதானிக்க முடியும்.

### கொடுப்பனவை நிறைவேற்றும் காலம் என்றால் என்ன?

### What is the settlement date?

கொள்வனவு செய்த அல்லது விற்பனை செய்த பங்குகள், தொகுதிக் கடன்களுக்கான பணக்கொடுப்பனவு இறுதியாக்கப்படும் காலம் கொடுப்பனவு செவ்வை செய்யும் காலம் எனப்படும்.

**பங்குகளைக் கொள்வனவு செய்யுமிடத்து,**

B.முகுந்தன்
முகாமையாளர்
Capitalalliance Securities (Pvt) Ltd
யாழ்ப்பாணம்

பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு 3 சந்தை நாட்களுக்கு (T+3) கொள்வனவாளரினால் கொடுப்பனவு தீர்க்கப்படல் வேண்டும். இது " மூன்று" என அழைக்கப்படும்.

**பங்குகளை விற்பனை செய்யுமிடத்து,**

பங்குகள் விற்பனை செய்யப்பட்டு 3 சந்தை நாட்களுக்குள் (T+3) கொடுப்பனவு தீர்க்கப்படும்.இது "up+மூன்று" என் அழைக்கப்படும்.

### சந்தையின் நடவடிக்கைகளை எவ்வாறு கண்காணிப்பது?

### How do I monitor the performance of the market?

பங்குகளின் விலையானது தினசரிப் பத்திகைகளில் அறியத்தரப்படுவதுடன் பங்குத் தரகர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள கணனிகளுடாகவும் தெரிந்துகொள்ள முடியும். அதேபோல் பங்குப் பரிவர்த்தனையின் எந்த ஒரு வியாபாரத் தளத்திலும் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். வானொலி, தொலைக்காட்சி ஊடாகவும் இவை அறியத் தரப்படுகின்றன.

கொழும் பங்குப்பரிவர்த்தனையில் இணையத்தளத்தினூடாகவும் (www.cse.lk) இவ் விபரங்களை அறிந்துகொள்ளமுடியும்.



பங்குச்சந்தையினால் பிரசுரிக்கப்படும் நாளாந்த, வாராந்த ,மாதாந்த,காலாண்டு மற்றும் ஆண்டறிக்கைகளை வாசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.இப் பிரசுரிப்புகள் சந்தைப் புள்ளி விபரங்கள், பங்கின் விலைகள் போன்றவற்றுடன் மேலும் பல முதலீட்டாளர் பயன்பெ தகவல்களையும் கொண்டுள்ளது.நீங்கள் பங்குத் தரகர்களிடம் இருந்தும் ஏனைய தகவல் வழங்குநர்களிடம் இருந்தும் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் குறுந் தகவல்கள் மூலமும் (SMS) தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### பங்கு விலைகளில் ஏற்படுகின்ற நகர்வுகளை அளவீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டிகள்

கொழும்பு பங்குப் பரி வர்த்தனை இரண்டு பிரதான விலைச் சுட்டி களையும் இருபது துறை சார்ந்த சுட்டிகளையும் அதேபோல் இரண்டு பிரதான மொத்தத் திரும்பல் சுட்டிகளையும் இருபது துறை சார்ந்த மொத்த திரும் பல் சுட்டிகளையும் வெளியிடுகின்றது.

### அனைத்துப் பங்குகள் விலைச்சுட்டண்

### (AllShare price Index- ASPI)

அனைத்துப்பங்குகள் விலைச்சுட்டண் ஆனது பட்டியிலிட்ட கம்பனிகளின் பங்குகளின் விலைகளில் ஏற்பட்ட நகர்வினை அளவிடு வதற்காக பயன்படுத்தப்படுகின்றது. இச் சுட்டியானது 1985 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

### மிலங்க விலைச்சுட்டெண்

### (Milanka Price Index-MPI)

மிலங்க விலைச்சுட்டெண் ஆனது தெரிவு செய்யப்பட்ட 25 கம்பனிகளின் பங்கு விலைகளில் ஏற்படுகின்ற மாற்றத்தினை மட்டும் அளவீடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இக்கம்பனியனாது திரவத்தன்மை (எத்தனை பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது) மற்றும் சந்தை முதலாக்கம் (அளவு) என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றன. இச்சுட்டெண் காலாண்டு தோறும் மீள் பரிசோதனை செய்யப்படுகின்றது. இச்சுட்டியின் அடிப்படையாண்டு 1998ஆகும். (முற்றும்)





தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 40 படங்கள் கொண்ட கண்காட்சியில் அதிபர் சிவமலர் அனந்தசயனம் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிப்பதையும், கல்லூரி மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப் படும் போது தன் முடிபை மாற்றிக் கொள்ளத் தெரிந்த வன்தான்.

*- டாக்டர் ஜான்சன்*

வலம்புரி

## இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ஈழத்தமிழருக்காக தோஷ நிவர்த்தி செய்வாரா?

இந்திய வெளியுறவுச் செயலராக நிருபமா ராவ் பதவியேற்றுள்ளார். இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த நிருபமா இலங்கை விவகாரத்தை நன்கு அறிந்தவர்.

இலங்கையில் அவர் தூதுவராக இருந்த போது ஈழத்தமிழர் சார்புடையவர் என்ற குற்றச் சாட்டுக்கள் சிங்கள அரசியல் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டது அவரின் பட்டறிவில் பதிவாகியிருக்கும்.

இலங்கையில் அவர் தூதுவராக இருந்த போது அவரின் நடவடிக்கைகள் பக்க சார்பற்ற வையாக இருந்ததென்பதை எவரும் மறுக்க முடியாது.

இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்து இலங்கை அரசு–ஈழத்தமிழர் விவகாரம் என்பவற்றை ஆழமாக தெரிந்து கொண்ட நிருபமா இந்திய வெளியுறவுச் செயலராகப் பதவிஏற்றமை ஈழத்தமிழருக்கு மன ஆறுதலை தந்தாலும், அந்த ஆறுதல் எந்தளவு தூரம் நிதர்சனமாகும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எதுவாயினும் இந்திய வெளியுறவுச் செயலராக இருந்த சிவ்சங்கர் மேனன் எமது விடயத்தில் பொறுப்புடன் அல்லது, நேர்மைத் தனமாக நடந்து கொள்வில்லை என்ற மனக் கவலை ஈழத்தமிழர்களிடம் உண்டு.

வன்னியில் மிகக் கொடூரமான யுத்தம் நடந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பலியான போது, இந்தியா தனது தார்மீக கடமையை செய்யத்தவறிவிட்டது.

இந்தத்தவறு வெளியுறவுச் செயலாளராக இருந்த சிவ்சங்கர் மேனன், பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகிய முக்கூட்டு பேரின் சதியாக ஈழத்தமிழர் கருதுகின்றனர்.

கடந்த இந்தியப் பொதுத் தேர்தலின் பின் வெளியுறவு அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜிக்கு அமைச்சு மாற்றம் கொடுக்கப்பட வெளியுறவு அமைச்சராக எஸ்.எம்.கிருஷ்ணா பதவி ஏற்றுக்கொண்டார்.

சோனியா–மன்மோகன் சிங் அரசு எந்த நோக்கத்திற்காக பிரணாப் முகர்ஜியிடம் இருந்து வெளியுறவு அமைச்சை எடுத்துக் கொண்டதென்பது தெரியாததாயினும் ஈழத்தமிழ்மக்களை பொறுத்தவரை, இலங்கை விவகாரத்தில் அமைச்சர் பிரணாப் முகர்ஜி பொறுபற்ற முறையில் நடந்து கொண்டதன் காரணமாகவே அவருக்கு மீண்டும் வெளியுறவு அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை என்ற நினைப்பு உண்டு.

எனவே எஸ்.எம்.கிருஷ்ணா வெளியுறவு அமைச்சராக இருக்க, நிருபமா ராவ் வெளியுறவுச் செயலராக இருப்பது ஈழத்தமிழரின் கிரக நிலை சாதகமாக அமைகின்றது என நம்புவதற்கு இடம் உண்டு.

எதுவாயினும் மிகப்பெரும் யுத்த கொடூரத்தை தமிழ் மக்கள் அனுபவிப்பதற்கு இந்தியாவும் காரணம் என்றவகையில், இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய தோஷத்தை நிவர்த்திக்கும் பொறுப்பு நிருபமா ராவுக்கு உண்டு.

# அனைத்து இன மக்களும் தன்மானத்துடன் வாழ அனைவரும் இலங்கையர் என்ற உணர்வு வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் நௌஷாத் தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டில் சிறுபான்மை இனங்கள் சமஉரிமைகளுடனும், தன்மானத்துடனும், தனித்துவமாகவும் வாழ வேண்டுமென்றால் முதலில் இந்நாட்டினை நேசிக்கும் நாட்டுப் பற்றுள்ள பிரஜைகளாக மாற வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம். நௌஷாத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறை அல்மர்ஜான் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது நாட்டுப் பெரும்பான்மையினர் மத்தியில் சிறுபான்மையினர்களுக்கு இடையே நாட்டுப்பற்று இன்மை என்ற பெரும் குறைபாடு நிலவுகின்றது. அதனை எமது வருங்காலச் சந்ததிகளுக்கு ஊட்ட வேண்டுமெனில் அதை பாடசாலைகளிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பாடசாலை நேரங்களில் காலை வேளையில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும். அல்லது அதன் இசையாவது ஒலிக்க வேண்டும். அதன் வாயிலாக மாணவர்களின் மனங்களில் தாய் நாட்டை நேசிக்கும் நாட்டுப் பற்று வளர வேண்டும்.

எமது நாட்டில் வாழ்ந்த மூதாதையர்கள் காலத்திலிருந்து இது நமது நாடு என்ற உணர்வு சிறுபான்மை இனங்கள் மத்தியில் ஊட்டப்படவில்லை. மாறாக மார்க்கத்தினையும் கலாசாரத்தினையும் வளர்த்தார்களே தவிர நாட்டினை நேசிக்கும் நல்ல பிரஜைகளை உருவாக்கவில்லை. அதன் விளைவு இப்போது தெளிவாகத் தெரிகின்றது.

சகல இன மக்களும் இந்நாட்டினை நேசிக்கும் பிரஜைகள் என்ற உணர்வு வந்தால் மாத்திரமே அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு போகலாம். அதுவரைக்கும் சிறுபான்மை இனங்கள் எப்போதும் இரண்டாம் தர பிரஜைகளாகத்தான் கருதப்படுவார்கள் என்பது கசப்பான உண்மையாகும்.

எனவே நாட்டினை நேசிக்கும் நாட்டுப் பற்றுள்ள சமுதாயத்தினை உருவாக்க பாடசாலைகள் மட்டத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

தன்மானத்துடனும், தனித்துவத்துடனும் அனைத்து இன மக்களும் வாழ வேண்டுமெனின் அனைவரும் இலங்கையினர் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போது தான் இனங்களிடைய நல்லுறவினை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்தார். (ஓ-4)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளுக்கான பிரதேச மட்ட முன்பள்ளி விளையாட்டு விழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. இதில் கொடிகாமம் பிரதேச முன்பள்ளி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் வரணி, கச்சாய், கொடிகாம குடும்ப முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

மேலும் சாவகச்சேரி பிரதேச முன்பள்ளி விழா நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறும். இதில் கைதடி, மட்டுவில், சாவகச்சேரி குடும்ப முன்பள்ளி விளையாட்டு போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் பங்குபற்றலாம் என தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராசா தெரிவித்துள்ளார். (ஓ-29)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கு நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மற்றும் திருநெல்வேலி, கோப்பாய் பங்குத்தந்தை அருட்திரு சந்திரபோல் அமல மரித்தியாகி ஆகியோர் கலந்து ஆசி வழங்குவதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பளர் அ. வேதநாயகம், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி. எஸ். மாணிக்கராஜா, மாநகர சபை ஆணையாளர் மு. சரவணபவ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

## முட்டுகளறுக்க வருகிறான்



பல்லவி

கணாங்களின் நாயகன் – நல்
மனாங்களின் நாயகன்

பல்லவி எடுப்பு

எங்கள் விநாயகன் கனகநாயகன்
எழுந்தருளி வருகிறான் சப்பறத்தில்

கண்ணிகள்

சீர் மலி வதிரியின் சிறப்புக்களோங்க
பார் புகழ் பூவற்கரையான்!
சேர் பக்தர் குறைகள் போக்கிடவே
நேர் முகங் காட்டி வருகின்றான்!
(கணாங்...)


முட்டுப் பட்டவர் முட்டுகளறுத்திங்கே
முழுமையருள் தந்திடவே – புன்
முறுவலித்தே வருகின்றான்! மூவுலகும்
முந்தித் தொழுதிடும் தொந்தி நாயகன்!
(கணாங்...)

சித்தி விநாயகன் புத்தி விநாயகன்
சித்த சத்துத் தந்திடும் நாயன்
சிங்காரித்த சப்பறமதனில் வருகிறான்
சிரித்தே நாம் வாழ்ந்திடவே!
(கணாங்...)

*அகியோபி*

இன்று வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் சப்பறத் திருவிழா

# தேடவேண்டும் இயேசுவை



## பரமபிதா காட்டிய பாதை

இந்த உலகமே தேடலில் ஈடுபட்டிருக்கிறது. வசதி படைத்த அமெரிக்கா போன்ற நாடுகள் வன்முறையில்லா அமைதியைத் தேடிக் கொண்டிருக்கின்றன. வசதியற்ற மூன்றாம் உலக நாடுகள் உணவையும், இருப்பிடத்தையும் தேடிக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் மானுடம் அமைதியையும், சமாதானத்தையும், வளமையையும், வாழ்வையும் தேடிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தேடல் நிறைவடைய வேண்டும் என்றால், தேடலில் ஒரு நேர்மையும், உண்மையும், ஒழுங்கும் இருக்க வேண்டும். இல்லையென்றால் தேடல் இறைவடையாது நீண்டு கொண்டே செல்லும்.

அதாவது அமைதி தேடலும், வளமைத் தேடலும் நிறைவடைய வேண்டும் என்றால், அத்தேடலில் நேர்மையும், உண்மையும், ஒழுங்கும் இருக்க வேண்டும். இல்லையென்றால் அத்தேடல் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல் ஆகிவிடும்.

இன்றைய நற்செய்தியில் இயேசுவை மக்கட் கூட்டம் தேடி அலைமோதுகிறது. அதற்கு இயேசுவின் பதில், ''நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல. மாறாக, அப்பங்களை வயிராற உண்டதால் தான் என்னைத் தேடுகிறீர்கள்" ஆம் உணவு என்பது மனிதனின் அடிப்படைத் தேவை. அந்தத் தேவை எங்கு நிறைவடைகிறதோ? யாரால் நிறைவடைகிறதா? அவர்களைத் தேடித்தான் மக்கட் கூட்டம் அலைமோதுகிறது. இது அன்றாட வாழ்வின் அனபவங்கள். திருடன் தான் திருடிய உணவைக் கொடுத்தாலும் பசித்தவனுக்கு அது அமிர்தமாகும்.

ஆனால் இயேசுவின் விருப்பமோ, வெறும் உடற்பசியை மட்டும் கவனத்தில் கொள்ளாமல், உள்ளத்துப் பசியையும் கவனத்தில் கொண்டு, அவரைத் தேட வேண்டும் என்று கூறுகிறார். உள்ளத்துப்பசி என்பது நீதிப்பசி, நேர்மைப்பசி, அமைதிப்பசி, சமத்துவ சகோதரத்துவபசி, மனித மாண்பும் மனித நேயத்திற்கான பசி. எனவே தான் இயேசு தன் மலைப் பொழிவில் பட்டினியாய் இருப்பாரே நீங்கள் பேறு பெற்றோர் என்று கூறுகிறார்.

அதாவது கடவுள் மீதும், இயேசு மீதும் விசுவாசமும், நம்பிக்கையும் மட்டும் போதும், எல்லா வகைப் பசியும் பறந்துவிடும். காரணம் அவரே எல்லா பசிக்கும் உணவு. "வாழ்வுதரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது, என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது.

ஆம் உடல் பசியைப் போக்க புறப்பொருளில் மட்டும் கடவுளைத் தேடாமல் உள்ளப் பசியாகிய அன்புப்பசி, அமைதிப் பசி, நீதிப்பசி, உண்மைப் பசியைப் போக்க நம் உள்ளத்திலே உறையும் இறைவனைக் கண்டு கொள்வோம்.

*ஜோன் றொபேர்ட்*

# தென்னாபிரிக்காவில் மகாத்மாகாந்தி வசித்த வீட்டை வாங்க மும்பை தொழிலதிபர் முடிவு

## இந்த வீட்டைஇந்திய அரசிடமே ஒப்படைக்க உள்ளதாகவும் தெரிவிப்பு


தென் ஆபிரிக்க நாட்டில் ஜோகனஸ்பார்க் நகரின் வடக்கு புறநகரில் ஆர்கிட் என்ற பகுதி உள்ளது. தேசப்பிதா மகாத்மா காந்தி தென் ஆபிரிக்காவில் தங்கி இருந்தபோது இங்கு அமைந்திருக்கும் தி கிரால் என்ற வீட்டில் 1907 ஆம் ஆண்டில் இருந்து 3 வருடங்கள் வசித்தார். இந்த வீட்டின் உரிமையாளர் நான்சி பால் என்பவர் ஆவார்.

அண்மையில் இவர் வீட்டை விற்றுவிட்டு வேறு நகரில் குடியேற முடிவு செய்தார். இதையடுத்து வீட்டை ஏலத்தில் விட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் விலை அதிகமாக இருந்ததால் யாரும் வாங்க முன்வரவில்லை.

இந்த நிலையில் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபரான பிரதீப் பாவ்னானி என்பவர் காந்தி அடிகள் வசித்த வீட்டை வாங்க முன்வந்துள்ளார். அது மட்டுமல்ல இந்த வீட்டை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கவும் அவர் முடிவு செய்து இருக்கிறார்.

வீட்டை வாங்குவதற்காக அதன் உரிமையாளர் நான்சி பாலுக்கு பணம் அனுப்ப தனக்கு அரசு முறைப்படி அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி ஜனாதிபதி பிரதீபா பாட்டீலுக்கு தொழிலதிபர் கடிதம் எழுதி இருக்கிறார் அந்த கடிதத்தில் தொழிலதிபர் பிரதீப் பாவ்நானி கூறி இருப்பதாவது,

தென் ஆபிரிக்காவில் காந்தி வசித்த வீட்டை ரூ. 2 1/2 கோடிக்கு வாங்க முடிவு செய்தேன். இதற்கு வீட்டின் உரிமையாளரான நான்சி பால் சம்மதித்துள்ளார். இதற்கான நடைமுறைகள் முடிந்ததும் இந்த வீட்டை இந்திய அரசிடம் ஒப்படைப்பேன். இதன் மூலம் காந்தி வாழ்ந்த வீட்டை ஒரு அருங்காட்சியமாகவோ அல்லது நினைவுச் சின்னமாகவோ பாதுகாக்க முடியும்.



எனவே காந்தி வசித்த வீட்டை வாங்குவதற்கு அரசு எனக்கு முறைப்படி அனுமதி தர வேண்டும். இதன் மூலம் காந்தி வாழ்ந்த வீட்டை நாட்டுக்கு அர்ப்பணிக்க முடியும்.

இவ்வாறு தொழிலதிபர் பாவ்நானி தனது கடிதத்தில் கூறி உள்ளார். (ஓ-4)

# இந்தியர் விற்ற லொத்தர் சீட்டு அமெரிக்காவில் முதல் பரிசு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் இந்தியாவின் கடையில் விற்கப்பட்ட லொத்தர் சீட்டுக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பரத்குமார் படேல் என்பவர் லாட்டரி கடை வைத்திருக்கிறார். கடந்த மாதம் 7 ஆம் திகதி இவர் கடையில் விற்கப்பட்ட லொத்தர் சீட்டுக்கு முதல் பரிசாக 65 கோடி ரூபாய் கிடைத்தது.

அப்ரே பாய்சி என்ற போக்குவரத்துக் கழக ஊழியருக்கு இந்த முதல் பரிசு கிடைத்துள்ளது. முதல் பரிசு பெற்ற பாய்சி பெரிய அளவில் ஆரவாரம் காட்டவில்லை.

தனக்கு கிடைத்த பெரும் தொகையை எப்படிப் பெறுவது என்பது குறித்து தன் வக்கீலைக் கலந்து முடிபு செய்வதாக மட்டும் கூறினார்.

ஆனால் முதல் பரிசுக்கான சீட்டை விற்ற பரத்குமார் படேலுக்கு போனஸ் தொகையாக ஐந்து லட்சம் ரூபாய் கிடைத்துள்ளது. இந்த பணத்தை வியாபாரத்தில் முதலீடு செய்யப் போவதாக பரத்குமார் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# தடுக்கி விழுந்து கால் முறிந்தவருக்கு 15 இலட்ச ரூபாய் நஷ்ட ஈடு வழங்க தீர்ப்பு

இங்கிலாந்தின் தேகெஸ்பரி நகரைச் சேர்ந்தவர் செலீனா கிளைடர். 40 வயது பெண்மணியான இவர் மதுபான பிரியை. தனது ஊரில் உள்ள இரவு விடுதிக்கு ஒன்றுக்குச் சென்றார்.

அங்குள்ள புகை பிடிக்கும் அறையில் தம் அடித்தார். திடீரென அவர் அங்கே தடுக்கி விழ காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதற்காக அவருக்கு அறுவை சிகிச்சையும் நடத்த நேர்ந்தது.

புகை பிடிக்கும் அறையில் விளக்குகள் தெளிவாக இல்லை. இதனால் தான் நான் தடுமாறி கீழே விழுந்து காலை உடைத்துக் கொள்ள நேரிட்டது.

எனவே எனக்கு மதுபான விடுதி நஷ்ட ஈடு தரவேண்டும் என்று கோரி வழக்கும் தொடர்ந்தார். மதுபான விடுதியோ செலீனா அதிக மது போதையில் இருந்தால் தான் இந்த சம்பவம் நடந்தது என்பதை மறுத்தது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த இந்த சம்பவத்தில் அண்டையில் நீதிமன்ற தீர்ப்பு செலீனாவுக்கு சாதகமாக அமைந்தது. சம்பவம் நடந்த நேரத்தில் அவர் ஆல்கஹால் கலக்காத பானம்தான் அருந்தியிருந்தார் என்று ஆஸ்பத்திரி அவருக்கு ஆதரவாக சாட்சியளித்தது.

இதனால் மதுபான விடுதி அவருக்கு 15 இலட்ச ரூபாய் தரவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது: இந்த தீர்ப்பு எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்கிறார் செலீனா. (ஓ-4)

# ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முதலாவது பூகோள அவதானிப்புச் செய்மதி

## வெற்றிகரமாக ஏவப்பட்டது

(துபாய்)

ஐக்கிய அரசு எமிரேட்ஸானது தனது முதலாவது பூகோள அவதானிப்பு செய்மதியான துபாய்சட் - 7 இனை வெற்றிகரமாக ஏவியுள்ளது.

வானத்தின் கண் என செல்லமாக அழைக்கப்படும் இந்த செய்மதியானது பூகோள சுற்று வட்டப் பாதையில் தனக்குரிய இலக்கை அடைந்துள்ளதாகவும் துபாயிலுள்ள உயர் விஞ்ஞான தொழில்நுட்ப பூகோள அவதான நிலையம் அச் செய்மதியுடன் வெற்றிகரமாக தொடர்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் மேற்படி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் அஹ்மட் அல் மன்சூரி தெரிவித்தார்.

எல்லாம் வல்ல அல்லாவின் ஆசீர்வாதத்தால் எமது செய்மதி ஏவும் செயற்கிரமம் முழுமையாக வெற்றிகரமாக அமைந்தது. துபாய் விண்கலமானது விண்வெளியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் கொடியை காவிச் சென்றுள்ளது என அவர் கூறினார்.

இந்த செய்மதியானது 680 கிலோமீற்றர் உயரத்தில் மணிக்கு 27 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் பூகோளத்தை சுற்றி வலம் வரவுள்ளது. (ஓ-4)

# இன ஒற்றுமைக்கான ஒபாமாவின் புது யுக்தி

(நியுயோர்க்)

அமெரிக்க வெள்ளை மாளிகையில் புது மையான பியர் விருந்து பசாரமொன்று வியாழக்கிழமை இரவு அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமாவால் நடத்தப்பட்டது.

அண்மையில் வெள்ளை இன பொலிஸ் உத்தியோகத்தரான ஜிம் கிரோவ்லியால் ஹர்வார்ட் பல்கலைக்கழக கறுப்பின பேராசிரியர் ஹென்றி லூயிஸ் கேட்ஸ் கைது செய்யப்பட்டதையடுத்து இன வேறு பாட்டின் அடிப்படையில் அக் கைது இடம்பெற்றுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டது.

இந்நிலையில் விடுதலை செய்யப்பட்ட பேராசிரியர் ஹென்றி லூயிஸ் கேட்ஸுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஜிம் கிரொவ்லியிற்கும் வெள்ளை மாளிகையில் பியர் விருந்து பசாரத்தில் கலந்துகொள்ள பராக் ஒபாமா அழைப்பு விடுத்தார்.

வெள்ளை மாளிகையில் பேராசிரியரும் பொலிஸ் உத்தியோகத்தரும் ஒபாமாவுடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்து வேறுபாடுகளை மறந்து கலந்துரையாடினார்.

இது தொடர்பில் ஒபாமா விபரிக்கையில் அவர்கள் நட்புறவாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

எம்மை வேறு பிரித்துக் கொள்வதை விட ஒன்றிணைத்து கொள்வதே பலமானது என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.



இன்றைய இரவில் நடைபெற்ற நிகழ்வு எனக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட விடயத்தில் முரண்பாடாக இருந்த இரு கனவான்கள் இன்று இணக்கப் பாடு கண்டுள்ளனர் என்று கூறினார். (ஓ-4)

# ஜேசுநாதர் காலத்து தட்டு கண்டுபிடிப்பு

(ஜெருசலம்)

இங்கிலாந்து நாட்டு தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஜெருசலம் நகரில் கடந்த சில ஆண்டுகளாக ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

யேசுநாதர் காலத்து பொருட்களை கண்டு பிடித்து அதன் மூலம் பல உண்மைகளை அறிந்து கொள்ள முடியும் என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார் கள்.

நீண்ட நாள் ஆய்வுக்கு தற்போது வெற்றி கிடைத்துள்ளது. ஜெருசலமின் பழைய நக ரில் ஒரு புதர் பகுதியில் அகழ்வாய்வு நடத்திய போது சுட்ட மண்ணால் தயாரிக்கப்பட்ட ஒரு தட்டு கிடைத்தது.

அந்த தட்டில் எழுத்துக்கள் பொறிக்கப்பட் டுள்ளன. அந்த எழுத்துக்கள் ஹிப்ரு அல் லது அரபிக் மொழியின் தொடக்கக்கால வடி வங்களாக இருக்கலாம் என்று கருதுகிறார் கள்.

இந்த மண் தட்டு எதற்காக பயன்படுத் தப்பட்டது என்ற ஆய்வும் உடனடியாக நடந்தது.

சாப்பிடுவதற்கு முன்பு கை கழுவுவதற்கு இத்தகைய தட்டு பயன்படுத்தப்பட்டது என்ற முடிபுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர்.

யேசுநாதரும் தினமும் உணவு சாப்பிடும் முன்பு இது போன்ற ஒரு மண் தட்டில் தான் கை கழுவி இருக்க வேண்டும் என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். (ஓ-4)

# மரண அறிவித்தல்

## திருமதி.பொன்னுத்துரை பூமணி



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும்கொண்ட திருமதி. பொன்னுத்துரை பூமணி அவர்கள்(31.07.2009)வெள்ளிக்கிழமை இரவு 12 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகர் பொன்னுத்துரை (ஓவசியர்- பெரும் தெருக்கள் திணைக் களம்) அவர்களின் அன்பு மனைவியும் திரு.பொ.சந்திரலிங்கம் (பிரபல சோதிடர்), திருமதி.தி.ரதி (லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும் திருமதி. ச.ரஜனி (ஜனசக்தி இன்சூரன்ஸ் கொழும்பு), Dr.பொ. திருவுடையான் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் தி.வாசுகி (லண்டன்), தி.நித்தியன் (லண்டன்), தி.திவ்வியன்(லண்டன்), ச.நித்தியராம் நாராயணன் (லண்டன்), ச.துளசிராம் நாராயணன்(லண்டன்), ச.சங்கரராம் நாராயணன் ( மாணவன் A/L பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புப் பேர்த்தியாரும் திருமதி.இ.செல்லம்மா, திருமதி.சி.ஞானபூஷணம், காலம் சென்றவர்களான அ.திரவியம், திரு.சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய கடல்கடந்த தொலைத்தொடர்பு அத்தியட்சகர் - கொழும்பு) மற்றும் பேராசிரியர் சபாஜெயராசா (தலைவர்-கொழும்பு தமிழ்ச் சங்கம்), திருமதி சோ. சாரதாதேவி (கனடா), திரு.ச.சிவனேசன் (கட்டிட ஒப்பந்தக்காரர், உரிமையாளர்- அரியதிரவியம் காட்வெயர் ஸ்ரோஸ், இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.09) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை, மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ.சந்திரலிங்கம் (மகன்)
(பிரபல சோதிடர்- கொழும்பு,
உரிமையாளர் -கண்ணன் கிரஷர்,
இணுவில்.

514/64 றொக்ஸ்சி காடின்
கொழும்பு-6

T.P.No.- 011 4926165

# கபுகெதர-சமரவீர ஜோடி இணைபிரியா ஆட்டம்; இரண்டாவது போட்டியிலும் இலங்கை வெற்றி


(தம்புள்ள)

கபுகெதரவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய இலங்கை அணி ஒருநாள் தொடரில் முதலாவது போட்டியிலும் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.



இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று தம்புள்ள சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி துஷார, முரளிதரனின் சிறப்பான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 47 ஓவர்களில் 168 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மொகமெட் அமீர் ஆட்டமிழக்காமல் 32 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 24 ஓட்டங்களையும் அறிமுக வீரர் உமர் குல் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் திலான் துஷார 9 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 33 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கட்டுக்களையும் முரளிதரன் 2 விக்கட்டுக்களையும் குலசேகர, மத்யூஸ் மற்றும் ஜெயசூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஒரு கட்டத்தில் 22.3 ஓவர்களில் 74 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும் 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கபுகெதர-சமரவீர ஜோடி இணைபிரியாத 95 ஓட்டங்களை எடுக்க இலங்கை அணி 43.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து169 ஓட்டங்களை மாத்திரம்பெற்று 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் கபுகெதர 97 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 67 ஓட்டங்களையும் சமரவீர 69 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 38 ஓட்டங் களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் சனத் ஜெயசூரியா 33 பந்துகளில் (5 பவுண்டரி அடங்கலாக) 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொகமெட் அமீர், அப்துல் ரஷாக் மற்றும் சகிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு வழியமைத்த கபுகெதர ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

## பங்களாதேஷ் அணி ஹட்ரிக் வெற்றி; தொடரையிழந்தது மேற்கிந்தியத்தீவுகள்



(செயிண்ட்கிட்ஸ்)

மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி தொடரை 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

பங்களாதேஷ்-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47.4 ஓவர்களில் 248 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பிளச்சர் 52 ஓட்டங்களையும் ரெய்லர், சமி தலா 40 ஓட்டங்களை எடுத்தனர்.

மகபுல் அலாம், மகமதுல்லா, அப்துல் ரஷாக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.5 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 249 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தொடக்க வீரர் ஜுனத்சித்திக் 55 ஓட்டங்களையும் மகமதுல்லா 51 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தனர்.


இது பங்களாதேஷ் பெற்ற ஹட்ரிக் வெற்றியாகும். முதல் ஆட்டத்தில் 52 ஓட்டங்களையும் 2ஆவது போட்டியில் 3 விக்கெட்டுக்களால் அந்த அணி வெற்றி பெற்று இருந்தது.

இதன் மூலம் பங்களாதேஷ் 3:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி புதிய வரலாறு படைத்தது.

ஏற்கனவே டெஸ்ட் தொடரையும் பங்களாதேஷ் அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றி சாதனை படைத்து இருந்தது. மகமதுல்லா ஆட்டநாயகனாகவும் சகீப் அல்ஹசன் தொடர்நாயகனாகவும் தேர்வாகினர்.

ஒப்பந்த பிரச்சினை காரணமாக மேற்கிந்தியத்தீவுகள் முன்னணி வீரர்கள் இந்த தொடரில் விளையாடவில்லை. இரண்டாம் தர அணியே விளையாடியது குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட்டின் எதிர்காலம்?



உலக அரங்கில் கால்பந்துக்கு அடுத்து அதிக ரசிகர்களை கொண்டது கிரிக்கெட்தான். விரைவில் கால்பந்துக்கு நிகராக கிரிக்கெட்டுக்கு ரசிகர் பட்டாளம் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் இருபது-20 போட்டிகள்தான். இது வளமான வளர்ச்சி என்றாலும் மறுபுறம் பாரம்பரியமிக்க டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள் வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டுள்ளன. எதிர்காலத்தில் இருபது-20 போட்டிகள் மட்டுமே இருக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

### பல்வேறு பரிமாணம்

கால்பந்து, ஹொக்கி, டென்னிஸ் ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு பரிமாணங்கள் இல்லை. ஆனால் கிரிக்கெட்டில் மட்டும் டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 என 3 பரிமாணங்கள் காணப்படுகிறது.

இதில் ஒன்று எழுச்சிப் பெற்றால் மற்றொன்று வீழ்ச்சியடைய ஆரம்பமாகிறது. இருபது-20 போட்டிகளின் அசுர வளர்ச்சியின் காரணமாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் தொய்வை எதிர் கொண்டுள்ளன.

### காயம் காரணம்

கிரிக்கெட் என்றாலே டெஸ்ட் போட்டிகள் என்ற காலம் தற்போது மலை ஏறிவிட்டது. வீரர்களின் உண்மையான திறமையை வெளிக் கொணரும் ஆற்றல் டெஸ்ட் போட்டிகளுக்கு உண்டு.

ஓவர் வரையறையில்லாததால் துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்து வீச்சாளர்கள் திறமையை நிரூபிக்க அதிக காலம் எடுத்துக் கொள்வர்.

இதன் மூலம் பெரும்பாலான வீரர்கள் அடிக்கடி காயத்துக்குள்ளாயினர். அதற்குப் பின்வந்த ஒரு நாள் போட்டிகளில் 50 ஓவர்கள் என்ற வரையறை இருந்தது.

தற்போது இருபது-20 போட்டிகளில் 20 ஓவர்கள் மட்டுமே என்பதால் பந்துவீச்சாளர்கள் தலா 4 ஓவர்கள் மட்டுமே வீசவேண்டிய நிலை ஏற்பட்டது.

தவிர இவ்வகைப் போட்டிகளில் விளையாடுவதால் வீரர்கள் காயத்திலிருந்து தப்ப முடிகிறது.

### பணம் முக்கியம்

இதன் காரணமாக பெரும்பாலான வீரர்கள் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் மட்டுமே பங்கேற்க விரும்புகின்றனர்.

சமீபத்தில் இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளின்டொப் டெஸ்ட் போட்டிகளிலிருந்து மட்டுமே ஓய்வு பெற்றார். இதற்கு முக்கிய காரணம் காயம்தான். காயம் தொடர்பான பிரச்சினை ஒரு புறம் இருக்க மற்றொரு முக்கிய காரணம் பணம்.

ஒரு டெஸ்ட் போட்டிக்கு வீரர்கள் பெறும் சம்பளம் சுமார் 3 இலட்சம் ரூபாய். ஒருநாள் போட்டிக்கு 2 இலட்சம் ரூபாய். ஆனால் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) உள்ளிட்ட இருபது-20 போட்டிகளில் வீரர்கள் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்படுகின்றனர்.

இதன் காரணமாக சர்வதேச கிரிக்கெட் தொடர்புகளையும் புறக்கணித்துவிட்டு, இவ்வகை போட்டிகளில் பங்கேற்க வீரர்கள் விரும்புகின்றனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த முதல் ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் தோனி, தான் அடிக்கும் ஒவ்வொரு ஓட்டத்துக்கும் ரூபாய் 1.5 இலட்சம் பெற்றார்.

### நன்மை உண்டு

ஐ.பி.எல். என்ற ஓர் அமைப்பு ஆரம்பமாகியதற்கு டெஸ்ட் போட்டிகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இங்கிலாந்து பிரிமியர் லீக் (இ.பி.எல்.) அமெரிக்கன் பிரிமியர் லீக் (ஏ.பி.எல்.) அமைப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் மூலம் டெஸ்ட் போட்டிகள்கூடுதலானபாதிப்புக்குஉள்ளாகும் வாய்ப்புள்ளது.

### எதிர் காலம்

பணம் மற்றும் காயத்தின் அடிப்படையில் வீரர்கள் டெஸ்ட் போட்டிகளை புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர்.

இதே கருத்தை சமீபத்தில் இந்திய அணியின் பயிற்சியாளர் கிறிஸ்டனும் தெரிவித்துள்ளார்.

வீரர்களின் மனநிலை மட்டும் இன்றி ரசிகர்களின் மனநிலையும் மாற ஆரம்பித்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளை பார்க்க ரசிகர்கள் தற்போது விரும்புவதில்லை ஒரு போட்டியின் முடிவுக்கு 5 நாட்கள் காத்திருக்க அவர்கள் விரும்பவில்லை.3 மணி நேரத்தில் முடிவு கிடைக்கும் இருபது-20 போட்டிகள் ரசிகர்களை பெருமளவு கவர்ந்து விட்டது.

இதே நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இருபது-20 போட்டிகள் மட்டுமே நிலைத்து இருக்கும். பாரம்பரிய மிக்க டெஸ்ட் போட்டிகள் பேரளவுக்கு மட்டுமே இருக்கும்.


நல்லூர்க் கந்தன் கொடிய வினைகள் நீக்கி யாவருக்கும் நல்லருள் புரிய வேண்டுகின்றோம்.
உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றிட நாடுங்கள்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)

# முகாம்களின் அடிப்படை வசதி...

அவர் தெரிவித்தாவது;

நான் அருணாசலம் முகாமில் இருக்கிறேன். கடந்த மே மாதம் வலைஞர் மடத்திலிருந்து இங்கு வந்தேன். அப்போது முகாமில் சாப்பாடு இல்லாமல் பட்டினி கூட இருந் திருக்கின்றோம். இப்போது நிறுவனங்கள் உதவி செய்கின்றன.

இருந்த போதும் சுகாதாரப் பிரச்சினை தொடர்ந்தும் மோசமாகவே இருக்கின்றது. மலசலகூடங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையி லேயே அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு நீர்பிரச்சினையும் உள்ளது. குழந்தைகளுக்கான மலசலகூட வசதிப்பாடுகள் இல்லாமையால் பெரும் பிரச்சி னை யாகவே இருக்கின்றது.நுளம்பு,இலையான் போன்றன தொகைக்கணக்கில் உள்ளன. உணவினை நாங்களாகவே சமைத்து சாப்பிடுகிறோம். உணவுப்பண்டங்களை நிறுவனங்கள்-தந்துள்ளன. நாங்களும் வெளியே கொள்வனவு செய்கிறோம்.

வெளிநாடுகளில் இருந்து காசு அனுப் பினால் எடுக்கக் கூடிய வசதி உள்ளது. ஆனால் அனுப்புகின்ற முழுத் தொகையையும் அவர்கள் தருவதில்லை. ஐந்தாயிரம்,பத்தாயிரம் என்றே தருகிறார்கள். ஆரம்ப நாட்களில் நீர் வசதி இல்லாமல் இருந்தது. படையினர் குளிக்கின்ற கிணற்றிக்கே பெண்களும் செல்ல வேண்டி இருந்தது. அதனால் அங்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டது. தற்போது குழாய்க் கிணறுகள் அமைத்து தரத் தொடங்கியுள்ளார்கள்.

இருந்த போதிலும் அந்த பிரச்சினை கள் மறைமுகமாக நீடித்து வருவது போலவே எமக்கு தென்படுகின்றது. வைத்தியசாலைக்கு அவசர தேவையின் பொருட்டு செல்ல முடியாது.

வைத்தியர்களிடம் பதிவு செய்து அவர்கள் அனுமதி அளிக்கும் போது தான் செல்ல வேண்டி இருக்கிறது. குறிப்பாக குழந்தை களை பொறுத்த வரை அவர் களுக்கு எந்த நேரத்தில் வருத்தம் வரும் என்று சொல்ல முடியாது. பதிவு செய்தே செல்வதால் அன்றைய தினம் சிகிச்சை பெற முடியாத நிலையும்ஏற்பட்டு விடுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முகாமிலுள்ள இப் பெண் கூறிய கருத்துக்கள்தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியூதீன் பி.பி.சிக்கு கருத்து தெரிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித் ததாவது, ஆரம்ப காலத்தில் இருந்தது போலவே முகாம்களின் நிலைமை தற்போதும் உள்ளது என்ற கருத்தை ஏற் றுக் கொள்ள முடியாது.

யுனிசெப் உள்ளிட்ட நிறுவனங்களின் உதவிகளை பெற்று நாம் ஏராளமான மலசல கூடங்களை அமைத்துள்ளோம். இவற்றிற்கு மேலாக கழிவகற்றும் பவுசர்களை அனுப்பியும் அவற்றை சுத்தப்படுத்தி வருகின்றோம். குறிப்பிட்ட முகாம்களில் பிரச்சினைகள் இருக்குமாயின் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக உள் ளேன்.

தற்போது அதிகளவிலான வைத்தியர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு நிவாரணக் கிராமத்திலும் சுகாதார வைத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய வைத்திய சாலை அமைக்கப் பட்டுள்ளது. எனவே அதிகமான மருத்துவ பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். வெவ்வேறு முகாம்களில் உள்ள குடும்பத்தினரை இணைக்கின்ற நடவடிக்கைகளை பொலிஸாரும் சமூகசேவைகள்அமைச்சும் இணைந்தே மேற்கொள்ளப்பட்டு மேற்கொண்டுவருகின்றன என்றார் (ந-5,14)


நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
அழகுக்கு அழகு செய்யும் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)

குறைந்த விலையில் நிறைந்த தரத்தில்அனைத்து மங்கள நிகழ்வுகளையும்படம்பிடித்திட எங்களை அழையுங்கள்
0771693448
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ்ப்பாணம், மானிப்பாய், மல்லாகம், நெல்லியடி.
(C-2904)

கெட்டிமேளம் திருமண சேவை
உங்களது வயது தகுதிகளுக்கேற்ப மணமக்களை தெரிவு செய்ய ஒரே இடம்
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-2904)

# யாழ்.-மதவாச்சி பஸ்...

அத்துடன் யாழ்.மாவட்டத்திற்கு மீளத்திரும்புபவர்கள் யாழ்பாணத்தில் எடுத்த பயணப் பாதுகாப்பு அனுமதியின் போட்டோப் பிரதி வைத்திருந்தால் இன்று முதல் வவுனியாவிலிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் வர முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கும் மதவாச்சிக்கும் இடையிலான பயணிகள் பஸ் சேவை இன்று முதல் தினமும் 5 பஸ்களில் இடம் பெறவுள்ளது.மதவாச்சியிலிருந்து கொழும்புவரை இணைப்புபஸ்சேவை நடத் தப்படவுள்ளது.

ஏற்கனவே பயண பாதுகாப்பு அனுமதியைப் பெற்றவர்கள் அதன் மூலப் பிரதியுடன் தினமும் காலை 7.00 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு பயண ஏற்பாடுகளுடன் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அத்துடன் பயணப் பாதுகாப்பு அனுமதியின் மேலதிக போட்டோப் பிரதி ஒன்றினையும் ஒவ்வொரு பயணியும் எடுத்து வருதல் வேண்டும்.

இன்றைய பஸ் சேவையில் பல்கலைக்கழக மாணவர்கள் 90 பேரும் நாளை 3ஆம் திகதி கப் பலில் பயணம் செய்ய பதிவு செய்த 110 பேருமாக 200 பயணிகள் அனுப்பப் படுவார்கள்.

தினமும் 200 பயணிகள் மாத்திரம் பயணம் செய்ய முடியும் என்பதால் நாளை 3ஆம் திகதி முதல் பயணிப்பவர்கள் பயணம் செய்வதற்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பதாக யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பதிவுகளை நேரடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு மீளத் திரும்புவர்கள் தமது பயணப் பாதுகாப்பு அனுமதியின் போட்டோப் பிரதியுடன் வவுனியாவிலிருந்து பஸ்ஸில் பயணிக்க முடியும்.

வவுனியாவில் இருந்து யாழ்ப் பாணத்திற்கு திரும்பும் பஸ்கள் வவுனியா கண்டி வீதியிலுள்ள இரம்யா இல்லத்தின் முன்பாக விருந்து புறப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை யாழப்பாணத் திற்கும் வவுனியாவுக்கு மிடையே தினசரி பஸ்சேவை எதிர்வரும்5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். வவுனியாவிலிருந்து யாழ்தேவி புகையிரத சேவை மூலம் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த பயணிகள் கொழும்புக்கு பயணம் மேற்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# கிளி. அரச அதிபர்...

தொடர்ந்து அரச அதிபரின் வாகனமும் அவரது ஆவணங்கள் சிலவும் அடையாளம் தெரியாத நபர்களால் வவுனியா அரச செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

இதேவேளையில் இது தொடர்பாக நேற்று விசாரித்த போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இருந்த போதிலும் அவர் மீதான குற்றச் சாட்டு என்ன என்பதையிட்டு தகவல்எதுவும்தெரிவிக்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேற்றப் பணிகள் அனைத்தும் அரச அதிபர் வேதநாயகனிடமே கையளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ந-5)

# புலிகள்...

வழங்கிய தகவல்களின் அடிப்படையில் ஆயுதங்களும்,தொலைவில் இருந்து இயக்கும் கருவி களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-5)

# நாடு கடந்த தமிழீழ...

அவர்களின் வேட்கையை அடக்க முடியவில்லை.

இப்போது இலங்கையில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகி உள்ளதுடன் மட்டுமல்ல அவர்கள் தமது அரசியல் வேட்கைகளை வெளிப்படுத்துவதற்கான வசதிகள் கூடக் கிடையாது.

அதனால் தமிழர்களின் அரசியல் போராட்டங்கள் முழுவதும் வெளியில் இருந்தே மேற்கொள் ளப்பட முடியும்.

நாங்கள் உருவாக்க முனைவது புறநிலை அரசு அல்ல.நாடு கடந்த அரசு ஒன்றையே நாம் உருவாக்க உள்ளோம்.

இதற்கு எந்த ஒரு நாடும் (அதாவது நிலப்பரப்பும்) தேவையில்லை.

இந்த அரசு புலம்பெயர் தமி ழர்கள் மத்தியில் இருந்தே தேர்வு செய்யப்படும் என்றார். (ந-5)

# யாழ். மாநகர...

அதன் பெறுபேறுகள் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப் படும் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ந-5)

# யாழ்.-கொழும்பு...

இதனால் ஏற்படும் செலவினத்தைக் கருத்தில் கொண்டே 150 ரூபாய் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து மதவாச்சி செல்லும் பஸ்கள் மீளத்திரும்புகையில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான முழுமையான சேவையில் ஈடுபடும் போது.189 ரூபாயால் தற்போதைய கட்டணம் குறைக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ந-5)

A/L பௌதிகவியல் வகுப்புகள்
2010, 2011 தமிழ் / ஆங்கில மொழிகளில்
பிரபல.கல்லூரிகளில் பௌதிகவியல் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட A/L வினாக்கள் உட்பட,M.C.Q விளக்கவிடைகளுடன் குறுகியகாலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.வெளிமாவட்ட வினாத்தாள்களும் செய்யப்படும்.பயிற்சிகள் திருத்தப்படும்.தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.
உடன் தொடர்பு : 0776648751 அல்லது நேரில்.
ஆசிரியர்
R. பாலசுப்பிரமணியம் B.Sc(Cey),Dip.in.Ed
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(3060)



## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் – துர்க்காபுரம்
### ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

ஞானதுர்க்கா அம்பாள் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலம் தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் துர்க்காபுரம் என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ துர்க்கை அம்பாளுக்கு இவ்வருடம் 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடத்த எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் கூடியுள்ளாள்.

அலங்கார உற்சவம் நிகழும் விரோதி வருடம் ஆடி மாதம் 12ம் திகதி (28.07.2009) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 21-ம் திகதி வியாழக்கிழமை (06.08.2009) இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாட்கள் நடைபெறுகின்றது.

09ம் நாள் விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தூயானவள் ஞானதுர்க்கை தேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியின் வீதியுலாவுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.தினந்தோறும் காலை 9 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூசை, திருவிழா என்பனவும் அதனைத்தொடர்ந்து அம்பாள் வீதியுலாவும் நடைபெறும்.

குறிப்பு: இன்று தொடக்கம் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து முற்பகல் 7.30 , 9.30 , 11.30 ஆகிய நேரங்களில் ஆலயத்திற்கு பஸ் புறப்படும்.அடியார்கள் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்மனின் பாதாரவிந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இறைபணியே இன்பப்பணி

துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
மிருசுவில்,
பரிபாலன சபை.

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு சி.நவரத்தின ஐயா.

(3052)

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம் (V.K.K)

(முன்னாள் பிரபல வர்த்தகர், முன்னாள் உரிமையாளர் யாழ்.ஆஸ்பத்திரி வீதி குணரத்தினம் ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை ஸ்ரீ முருகன் அரிசி ஆலை)

கொக்குவில் மேற்கு கேணியடியை பிறப்பிடமாகக் கொண்ட பிரபல வர்த்தகர் வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம் கொழும்பில் 30.07.2009-ல் காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.08.2009 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலியை தொடர்ந்து இடம் பெற உள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீ.சோபிகா,ஸ்ரீ.சஞ்ஜீவன்,ஸ்ரீ.சொரூபிகா,
பேரப்பிள்ளைகள்.

(c-2956)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.